777

# ஜகன் மோகினி

ஏவிளம்பி ஆவணி மீ 1—9—57 25 நயா பைசா

## கலை பேசுகிறது

மலர் 34. இதழ் 9.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 NOV 1957
MADRAS





# ஜகன்மோகினி



ஐயுணர்வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி

செப்டம்பர் 1957. மலர் 34, இதழ் 9. ஏவிளம்பி ஹு ஆவணி மீ

பொருளடக்கம்

பக்கம்

சுதந்தரம் பெற்றும் சுகம் பெறாததேன்? —V.K. பார்த்தசாரதிஐயங்கார் 1

பகவத்கீதைக் குறிப்புகள் —ராஜாஜி 6

எங்களது இன்பச் செலவு —T. S. ராஜகோபாலன் 8

அன்பு வெள்ளம் —வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன் 12

பக்கம்

காளிதாஸர் கனவு —K. S. ராமஸ்வாமி சாஸ்திரி 16

உங்கள் செல்வம் —புஜலா 18

சதாபிஷேக மகோத்ஸவம் 20

வை.மு. ஸ்ரீபிந்தீப ஸ்தம்பம் —வை.மு.விஜயலக்ஷ்மி 257-272

கலை பேசுகிறது ப்ரமிக்கும் செய்கை —சாரக்ராகி (ராப்பர் பக்கம் 2)

---

கலை பேசுகிறது சாரக்கிராகி

## ப்ரமிக்கும் செய்கை

சுமார் 30 வருடங்களுக்கு முன்பு திருவல்லிக்கேணி சங்கீத சபாவில் அக் காலத்தில் ப்ரசித்தராய் இருந்த பங்களூர் தாயி அவர்களின் கச்சேரி நடந்தது. கூட்டம் நிறைந்து இருந்தது. ஸ்ரீதாயி அவர்களின் சாரீரம் சன்னமாயும், ஜிலுஜிலுப்பாயும் இருக்கும். அக்காலத்தில் ஒலிபெரிக்கிகள் இல்லாததால் நிரம்பதூரத்தில் உட்கார்ந்து இருப்பவர்களுக்கு கச்சேரி காதில் விழுவதும் சற்று துர்லபம் தான். ஒவ்வொரு வித்வான்களிடமும், வித்வாம்ஸினிகளிடமும் சில சில உருப்படிகள் அவர்களுக்கென தனி பாணியில் ப்ரத்யேகமாக அமைவது இயல்பு. அம் முறையில் பங்களூர் தாயி அவர்களுக்கு அடாணு ராகத்தில் ஏலா நீ தயராது, பஜன சேயராதா, சகாணுவில் தோமு சேயக

# சுதந்திரம் பெற்றும் சுகம் பெறாததேன்?

ஸ்ரீ வி. கே. பார்த்தசாரதி அய்யங்கார், பி.ஏ., பி.எல்.,

## அன்றும் இன்றும் அதிருப்தியே

1857 வருடத்திய சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழா, இந்தியச் சுதந்திரம் சித்தித்த பத்தாமாண்டு தினமாகிய 15—8—1957 ல் நடந்தேறியது. ஈச்வர நினைவும் பிரார்த்தனையுமில்லா மதப்பற்றற்ற சுதந்திர குடியரசின் சட்ட திட்டங்கள் குடிகள் எதிர்பார்த்த சுக சௌக்ய க்ஷேமலாபங்கள் தரவில்லை.

சுதந்திர விழாத் தினத்தன்று நமது ஆட்சிப் பொறுப்பை ஏந்தி நிற்கும் தலைவர்கள் விடுத்த செய்திகளும், செய்த பிரார்த்தனைகளும் கூறிய புத்திமதிகளும் வெறும் பேச்சுக்களா?—ஏன் இதுவரை அவையாவும் அவர்களாலும் செயலாற்றலில் அனுஷ்டிக்கப்படவில்லை.

ஜனாதிபதி சொன்னார்—"இதுவே நமது சோதனைகாலம்: அரசியல் சுதந்திரத்தினின்றும் பொருளாதாரச் சுதந்திரந்தேடும பாதையில் விடப்பட்டுள்ளோம்"—என்று. பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் மீது பொதுமக்கள் கொண்டிருந்த அதிருப்தி காரணமாகவே இந்தியாவில் 1857 ல் பெருங் கிளர்ச்சியெழுந்ததென்ற அடிப்படை உண்மையையும் அவர் அறிந்து அறிவித்துள்ளார்: எனவே ஆள்வோர் மீது ஆளப்படுவோருக்கு அதிருப்தி யேற்படாதிருக்க வேண்டியதே உண்மைச் சுதந்தர ஆட்சியின் அடிப்படை யென்பது தெரிய வருகிறது. இன்றைய நிலையிலும் அதிருப்தியே எங்கும் எவரிடமும் எதிலும் குடி கொண்டுள்ளது. அத்தகைய அதிருப்தியை அகற்றவேண்டிய அடிப்படைக் காரியங்களேதும் இன்னமும் கைக்கொள்ளப் படவில்லை. வியாதி யிருப்பதை அறிந்த பின்னர், அவ்வியாதி உண்டான மூல காரணத்தை ஆராய்ந்தறிந்து, அகற்றாமலே அவரவருக்கு இஷ்டமானபடி சிகிச்சைகள் சொல்லியும் செய்தும் போவதால், வியாதியஸ்தன் அவஸ்தைப்பட்டு இறப்பதுதான் முடிவான அனுபவம்: நாட்டின் க்ஷேமலாபமும், குடிகளின் திருப்தி சௌக்யமும் இதே மாதிரியதுவே.

## 1857ன் பாடத்தை 1957ல் மறக்க வேண்டாம்

மௌலானா அப்துல் கலாம் அஜாத், 1857 வருஷத்திய சுதந்தரக் கலகம், பயனபடாது பட்டுப்போன காரணத்தை எடுத்துக் கூறி யிருப்பதும் நாம் நினைவில் கொண்டு, நடத்தையில் அனுஷ்டிப்பதவசியம். அஜாத் சொல்கிறார்—"இந்தியரின் தேசிய குண மேம்பாடு மிகுந்த இழிவான நிலைமைக்கு வந்திருந்தது. சுதந்திரத் தேசியத் தலைவர்கள் பலரும் ஒருவருடன் ஒருவர் ஒருமைப்பட்டு ஒத்துழைப்பவராயிராது, தலைக்குத்தலை அபிப்பிராயத்திலும் கொள்கைகளிலும் பேதப்பட்டுத் தலைக்குத்தலை பெரிய

தனம் நாடும் சுயநலத்தாராயிருந்தனர். ஒருவரைக் கண்டு ஒருவருக்குப் பொறுமையும் துவேஷமும் மிகுந்து, பெருங் கிளர்ச்சிப் படையாளரிடைச் சிறுசிறு கலகங்கள் நிறைந்து பொதுப் பலத்தைப் பாழ்படுத்தி நின்றன. பொதுக் கொள்கை மீது தனிச் சுய நலக் கொள்கையாளர் ஆதிக்கமதிகரித்ததால், பொதுப்படைச் சுதந்திரக் கோரிக்கை ஒற்றுமையின்றித் தோல்வியடைந்து, 1857 கலகம் எளிதில் நசுக்கப்படுவதாயிற்று''—இந்த அறிவுறுத்தும், அச்சம் மிகுத்தும், திடத்த உண்மை, இன்றைய தேசியத் தலைவர்களும் அவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமைகொண்ட சுதந்திர இந்தியக் குடிகளும் சிந்தனையுள் கொள்ள வேண்டிய விஷயமே. அஜாத் ஆராய்ந்து அறிவித்த அன்றைய நிலைமை இன்றையச் சுதந்திர இந்தியாவில் நிறைந்தேயுள்ளன. எனவே 1857 பாடத்தை மறவாது, பெற்ற சுதந்திரம் நிலைத்து, பிறர் கைக் கீழ் நாம் திரும்பவும் போகாதிருக்க விரும்புவோமானால், இந் நிலையைப் போக்க வேண்டியதவசியம். அஜாத் மேலும் சொல்கிறார், "1757 வருஷத்திய குழப்பங்களே 1857 வருஷத்திய கலகமாயிற்று. **சுதந்திர மென்பது வாழ்க்கை இலட்சியத்தின் இறுதியல்ல— இலட்சிய வாழ்க்கையின் ஆரம்பமே சுதந்திரம்**'' என்று. எனவே சுதந்திரம் பெற்றுள்ள நாம் ஓர் இலட்சிய வாழ்க்கை இப்பொழுதுதான் ஆரம்பித்துள்ளோம். அந்த லட்சியத்தை அறிந்து அடையும் மார்க்கங்களை ஏவாது விடிவோமாகில், பெற்ற சுதந்திரத்தை இழந்து விடுவது திண்ணமே.

### சொல்கிறபடி செய்தால்......?

ஜனாதிபதியவர்கள் குறிப்பிட்டுள்ளார் "ஒவ்வொரு இந்தியனும் தனது கடமையை யோக்கியமாகவும் மனச்சாட்சிக்கு விரோதமின்றியும் செய்தாக வேண்டுமென இந்தியத் தாய் எதிர்பார்க்கிறாள். இன்று நாம் வெகு சங்கடமான நிலையில் சோதனைக்குள்ளாகி நிற்கிறோம்''—என்று. உபஜனாதிபதி உபதேசிக்கிறார்— "வெளிப்புறத்தினின்றும் எவரும் என்றும் நம்மை வென்றதில்லை. நாம் நமது உட்புறத்தினின்றுமே தோற்கடிக்கப்பட்டு வருகிறோம்''—பந்த் பரிதவிக்கிறார்—"நாம் மிகவும் கஷ்டமான காலங்களில் வாழ்ந்து வருகிறோம்: நம்மைச் சுற்றிலெங்கும் திடம்பட்ட வாழ்க்கை நலன்களும் கட்டுப்பாடுகளும் கலகலத்து, நிலை குலைந்து போயுள்ளன''—என்று. இவை யனைத்தும் உண்மை நிலையை எடுத்துக் காட்டும் மொழிகளே. சரியான எச்சரிக்கையே—. ஆனால், இவற்றைக் கூறியவர்கள், உண்மை ஆர்வத்துள் இவைகளை மொழிந்து, விபத்துக்கள் நேரிடாது நம்மை நேர்வழி திருப்பிட வேண்டிய முயற்சிகளை ஏன் எடுக்கவில்லை என்பதுதான் இன்றைய பிரச்சினை.

### நேர்வழி விட்டு கோணல்வழி புகுந்தால்......?

பல துறைகளிலும் இன்று நாம் படும் கஷ்டங்களுக்கும் அடிப்படை காரணம், எத்துறையிலும் திறமின்மையும், அகற்றவொண்ணா லஞ்சப்பேயின் சேஷ்டையும், தலைக்கு மிஞ்சிய சிக்கன

183213

மற்ற வீண் செலவு மிகுத்தும் அரசியலாதி அமைப்புக்களுமே யென நம்மை ஆள்பவர்களே அறிந்து அறிவித்துள்ளார்கள். ஆனால் இத்தீமைகளை அகற்ற நிருவப்படும் திட்டங்கள் வேலியே பயிரைத் தின்னும் கதைபோல் உள்ளன. இது ஏன்?

சமூகத்தாரிடைச் சமதர்மமும் சகோதரத்துவமும் நிலைத்து நிற்க உழைக்கும் அரசாங்கம், இந்து மதத்திலிருந்து ஜாதிபேத வகுப்புவாத மகற்ற முன்னிற்கும் மதப்பற்றற்ற அரசாங்கம், தாமே அரசாங்கத்துறைகளில், பெருவாரியினத்தார்; சிறுபான்மையோர்; உயர்த்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர்—என்றெல்லாம் வகுப்புவாரிப் பேதங்கள் புகுத்துச் சலுகைகள் பெருக்கிப் பதவி கொடுத்துப் போமாகில் திறன் எங்கிருந்து வளரும்?—சலுகைக் காரணமாகப் பதவி வருவோர் சலுகை பெற்றுங் கொடுத்துமே செயலாற்றக் கூடுமே யொழிய, நிஷ்பக்ஷபாதமான திறன் பெருக்கும் செயலாற்றல் கூடுமா?—ஆகவேதான் லஞ்சப் பேய் நம்மிடை புகுந்து நிலைத்து அகற்ற முடியாதபடி வேரூன்றி விட்டது. நேர்வழி விடுத்துக் கோணல் வழி புகுந்து சென்ற வண்ணமே, நேர்வழிப் பிரசாரம் செய்து போகசுகங்களைக் கட்டிக் கொண்டால், சிக்கனம் எங்கிருந்து வரும்?—வீண் சிலவுப் பெருக்கே இடையருது நேரத்தானே வேண்டும்?

## த்யாகத்தால் பெற்ற செல்வம் மோகத்தால் நழுவலாமா?

காந்தி மகான் ஒருவரது தியாக நேர்மை, அஹிம்ஸா போராட்டம் இதன் காரணமாய் இந்திய மக்கள் சுதந்திரம் பெற்றனர். தியாக காரணமாய் ஒருவர் பெற்றுக் கொடுத்ததை, நாம் தியாகச் சிந்தையுடன் அதே நேர்வழியில் அஹிம்ஸா மார்க்கங்களில் அனுபவித்தோமானல் அச்சுதந்திரம் நம் மனைவருக்கும் திருப்தியும் சுகமும் தருவதாக நிலைக்கும். அதை விட்டு அவரவர் தத்தம் ஆசைகளைப் பூர்த்தி செய்வித்துக்கொள்ள இச்சுதந்தரத்தைப் பயன்படுத்தி வருவோமானல் எக்காலும் எவர்க்கும் எவ்வித சுகமோ, க்ஷேமமோ, மன அமைதியோ எப்படிக் கிட்டக்கூடும்? சுதந்தரம் பெற்றும் சுகமே காணேமே என்று இன்று நாம் ஏங்கி நிற்பதின் மர்ம விளக்கம் இதுவே. இந்தக் காரணமும் நாம் அறியாததல்ல. அறிந்தும் சுயநல மனப்பான்மை விட்டபாடில்லை நம்மையும், பதவியிலுள்ளோரையும்: அடிமைத் தனத்தை அகற்றிய மாதிரியே ஏழ்மைத் தனத்தையும் அகற்ற வேண்டுமென ஒவ்வொருவரும் பேசிப் போகிய வண்ணமே, பால் கொட்ட வேண்டிய பானையில், நீர் கொட்டிச் சென்ற சாமர்த்தியம் போல, தனக்கும் தன்னைச் சார்ந்தோருக்கும் பிறரதைப் பிடுங்கியாகிலும் சுகமும் தனமும் சேமித்திட முயற்சிகள் செய்வோமாயின், ஏழ்மைத்தனம் எப்படி நம் நாட்டைவிட்டகலும்? அது அகலாததுடன் அசூயையும் மனக் கசப்பும், கள்ளவழிகளும் நிலைத்தே கௌரவ உருவில் உலவாது என்ன செய்யக் கூடும்?

## காந்தி சிலையை அழிப்பதா? சுதந்திரத்தை ஒழிப்பதா?

ஒரு சிறிய விஷயத்தை எடுத்துக் கொள்வோம். நமது மாகாணத்தில், திராவிடக் கழகத்தார்; பிராமணப் பெயரையே அழிக்க

முன் வந்துள்ளனர்; அதை அடக்க அரசாங்கம் எதுவும் செய்யவில்லே. பிள்ளேயாரை உடைக்க வாரம்பித்த இவர்கள், இன்று, ஈ. வே. ரா. அவர்கள் வாயிலாகக் காந்திச் சிலேகளேயும் உருவங்களேயும் கண்ட விடமெல்லாம் பிடுங்கியெறிந்து அழிப்பதாகப் பகிரங்கமாக முன் வந்துளர். இதைக் குறித்தாவது அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லேயெனச் சட்டசபையில் கேட்டதற்கு அரசாங்கத்தார் சொல்லிய பதிலென்ன—. தி. க. எதைச் செய்தாலும், நாங்கள் பொதுமக்கள் எதிர்ப்பு ஒருமைப்பட்டு பலப்பட்டாலொழிய அவர்களே அடக்க முன் வரமாட்டோம் என்றூர்கள். பிராமணர் ஒழிப்பில் பொதுஜன எதிர்ப்பு இல்லேபோலும் அரசாங்க அறிவில். பொதுஜன ஆமோதிப்பே இருக்கிறதென்பதே அரசாங்கம் அறிவே போலும். இருந்தாலும் காந்திச் சிலேயை அழிப்போமென்று சொல்வதே ராஜத்துரோகமாகாதா? அப்படிச் சொல்வதற்கே அவர்களேத் தண்டிக்க வேண்டியது அரசாங்கத்துக் கடைமையல்லவா. மன்ருே சிலேயை வெடிமருந்து வைத்து உடைப்பேன் என்றவனுக்கு கடுங்காவல் தண்டனே அளிக்கத் தெரிந்த அரசாங்கத்திற்கு, நம் கண் முன்பாக த்யாகத் தீயில் குளித்து சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்த வள்ளலின் உருவத்தை அழிப்பேன் என்று கர்ஜிப்பவர்களே தண்டிக்கல் தெரியாமல்—பொதுமக்களின் மீது பழிசுமத்த வேண்டும்? அது நியாயமா? அதைவிட்டு வகுப்புவாதத் துவேஷத்தை வளரவிட்டு, கலகம் ஓங்கவிட்டு, கலகக்காரர்கள் சச்சரவிட்டு மடிந்த பின்னர் அரசாங்கம் தலேயிடுவதால் யாருக்குப் பிரயோஜனம்? எரிகிற தீயில் பிடுங்கியது லாபமென்பதா அதிகாரிகள் கொள்கை?—

## நிர்வாக ஊழலே சகல இன்னல்களுக்கும் காரணம்?

1857ல் எழுந்த புரட்சி ஏன் வெற்றி பெறவில்லே?—இந்தியரது ஒற்றுமையின்மையினுல்—இன்றும் அதே ஒற்றுமையின்மையும், மனிதனுக்கு மனிதன் துவேஷ வளர்ப்பும், பலவிதக் கட்சிக் கொள்கைப் பிரசாரங்களும் நம் நாட்டில் வளர்ந்திட விடப்படுமாகில், காந்தி மகான் பெற்றுக் கொடுத்த சுதந்திரத்தை நாமே இழக்க நேரிடும் என்பதை சுதந்திர இந்திய அரசாங்கமும் குடிகளும் ஞாபகங் கொள்ள வேண்டியதே. இனி நமது வறுமையும் பலவித அரசியல்பொருளாதாரச் சமூக இன்னல்களும் ஊழல்களும் அகற்றிடும் மார்க்கமாகும்.

உள் மர்மமாக நிகழ்ந்து வரும் சுதந்திர வேரறுக்கும் நாமுமறியாத இக் காரணங்களின் வெளியீடான விளேவுகளும் இல்லாமலில்லே. அவற்றுள் முக்கியமானவை அரசாங்க அலுவல் நடத்தும் நிரந்தர சிப்பந்திகளது பதவிக்கு, வகுப்புவாத விகித காரணமாகவும் இதர காரணங்களாலும், திறனும் தேர்ச்சியும் பெற்ற உயர்தர நிஷ்பக்ஷபாதிகள், சர்விஸ் கமிஷனுல் தேர்ந்தெடுக்கப்படாததுடன்கூட, சிப்பந்திகளேத் தேர்ந்தெடுக்கும் கமிஷன் மெம்பர்களுடனும், சிப்பந்திகளுடனும், அரசாட்சிக் கட்சியினர் அடிக்கடிப் பிரவேசித்துத் தத்தம் இஷ்ட காரியங்களேச் சாதித்

துப் போக முன் வருவதுதான். இதை நமது ராஜாஜி அவர்கள் நன்கு விரித்து விவரித்து உணர்த்தியுள்ளார். அரசாங்க சிப்பந்திகள் அரசியல் கட்சியாரது ஆதிக்கத்திற்கு அதீதராக ஆக்கப் பட்டாலொழிய, நமக்கு உண்மைச் சுதந்திரமும், சுதந்திரம் தர வல்ல சுகங்களும் உண்டாகா. சுதந்திர உணர்ச்சி வேரில் பட்டுப் போவதாகவும் ஆகிவருகிறது. இது காரணமாகவே நம் நாட்டில் நடந்து வரும் பலவித 'வேலை நிறுத்த'ப் பயமுறுத்தல்கள். தினே தினே பல துறைகளிலும் நடந்துவரும் விபத்துக்களும் ரயில் விபத்து, விமான விபத்து, படகுகள் விபத்து, ரோட்விபத்துக்கள்—இவையாவும் பதவியிலுள்ளோரது திறனின்மையையும், அஹிம்சை நோக்கமற்ற சுயநல மனப்பான்மையையுமே எடுத்துக் காட்டுகின்றன.

### அஸ்திவாரம் கலகலத்தால் கட்டிடம் நிற்குமா?

இன்றைய குழந்தைகளே நாளைய சிறுவர்களும், தலைவர்களும் ஆட்சியாளர்களும். ஆகவே அவர்களது கல்விபோதனையும் வளர்ப்பு பராமரிப்பும் நேர்வழியில் தெய்வ பக்தியுடன், சமூகத்தாரிடை அன்பும் அஹிம்சையும் கொண்டுளதாய், நடந்தேறுவதை அரசாங்கம் கவனிப்பது விட்டு, கல்வி முறையை அரசியல் கட்சியாளர் வசம் விட்டு, நிலையற்றதாகவும், மதப்பற்றில்லாததாகவும், கட்சி பேசி வகுப்புவாதம் மிகுத்து இச்சைப்படி போவதாகவும் செய்துபேசுவது சுதந்தரவேரறுத்து வரும் மற்றுமோர் வருந்தத்தக்க விஷயமாகும்.

### கடன் வாங்கியும் பட்டினி... கல்யாணம் செய்தும்...

போலிச்சுதந்திர வளர்ப்பைப் பேசி உண்மைச் சுதந்திரம் மறைவதை இனியும் கண்மூடிக் காணுததுபோல மறைத்து வைத்தும் பகட்டுப் பேச்சுக்கள் பேசியும் செயல்கள் செய்தும் காட்டி மறைப்பதில் எவர்க்கும் எவ்விதப் பயனும் தராது. 1757 கலககாரணமும் தோல்வியும், 1857 புரட்சியெழுந்த வகையும் அடக்கிய முறையும் 1957 ல் சுதந்திரம் பெற்றோர் சீர்தூக்கியறிந்து அனுஷ்டித்துப் பலனடைய உபயோகித்துக்கொள்ளாது போவார்களாகில், 1757, 1857 ல் கிளம்பிய சுதந்திர உணர்ச்சியின் கதியேதான் 1957ல் கிடைத்த சுதந்திரத்திற்கும் ஏற்படக் கூடுமென்ற சுதந்திர மறிவுறுத்தும் உண்மைப் பேராபத்தை இந்தியர் அறிய வேண்டுவதே. 1757—1857 சுதந்திரக் கலகத் தோல்வியும் 1957ல் உள்ள சுதந்திர இந்திய நிலைமையும் இன்று வெளியுறுத்தும் பாடமும், சுதந்திரம் பெற்றும், நாம் சுகம் பெருததேன் என்ற இன்றைய வினாவிற்கு விடையுமாம்.

---

## அமரகவி இருந்தால்?...

செப்டம்பர் மாதம் என்றாலே அமரகவி **பாரதி**யாரின் உருவந்தான் நினைவிற்கு வருகிறது. நம் பாரத நாடு சுதந்திரமடைய தீர்க்கத் தரிசனத்துடன் பல கவி மாலைகள் சூட்டினர். கவியின் கனவு பலித்தது. ஆனல்! அவர் நினைத்தபடியா இன்று நம் நாட்டின் நிலை இருக்கின்றது? இன்று அவ்வமரர் இருந்திருந்தால், இதற்கும் ஒரு கவி பாடி வழி வகுத்திருப்பார் அல்லவா? அவர் நாமம் வாழ்க!

# பகவத்கீதைக் குறிப்புகள்

ராஜாஜி

பதினேழாவது அத்தியாயம்.

இந்த அத்யாயத்தில் ஆரம்ப சுலோகங்களில் சொல்லப்படும் விஷயங்கள்:

மனிதன் எந்தப் பூஜை செய்கிறனே அந்த விதம் தன்னைச் செய்து கொள்ளுகிறன். எந்த நோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு தினமும் பூஜித்தும் த்யானித்தும் வருகிறனே அந்தக் கருத்தின் தன்மையை அவன் வர வர அடைந்து விடுகிறன். எந்த லட்சியத்தைத் தினமும் எண்ணி எண்ணி வருகிறனே அந்தச் சொரூபத்தை அவன் வரவர அடைந்துவிடுகிறன். எண்ணங்களின் சக்தி இது.

ஆனபடியால் எப்போதும் நல்ல லட்சியத்தை வைத்துக்கொண்டு அதில் சிரத்தை செலுத்தவேண்டும்.

எதையும் இரண்டு முனையிலிருந்து பார்க்கலாம். உள்ளத்தில் எந்த எண்ணங்களை வைத்துக்கொண்டு வாழுகிறனே மனிதன், அப்படியே ஆகிவிடுகிறன் என்பது சொல்லப்பட்டது. பிறகு அவனவன் குணத்தின்படி அவனவன் வழிபடுவான் என்றும் சொல்லப்படுகிறது. அவனவன் பெற்ற பண்பின்படி அவனவன் பூஜைமுறை, ஆகார முறை முதலியவைகளைப் பின்பற்றுவான். சாத்விககுணம், ரஜோ குணம், தாமஸ குணம் என்று மக்கள் குணங்களை மூவகையாகப் பிரித்து அந்த அந்த குணத்தவர்கள் அந்தந்த குணம் இழுத்துச் செல்லும் வழியில் வேள்வி, பூஜை, தவம், தானம், ஆகார முறை இவற்றை அனுசரிப்பார்கள் என்று விளக்கப்படுகிறது.

இந்த விளக்கத்தினின்று நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றல், நல்ல ஆரோக்கியமான ஆகாரம் உட்கொள்ளவேண்டும். அதிகம் புளிப்பு அல்லது அதிகக் காரமானதும், ஊசிப்போனதும், புளித்துப் போனதுமான உணவுகள் கூடாது; செய்யும் பூஜைகளும் விரதங்களும் ஒரு லாபத்தைக் கருதிச் செய்யக் கூடாது. ஆண்டவனுக்கு அர்ப்பணமாகச் செய்துவிடவேண்டும். தானங்களையும் அவ்வாறே பிரதி பிரயோஜனத்தைக் கருதாமல், நல்ல பாத்திரம் என்று அறிந்து தானம் செய்வது கடமை என்று கருதிச் செய்துவிடவேண்டும். டம்பத்

துக்காகவும், பிரதி பலனை உத்தேசித்தும், தானங்கள் செய்தல் முறையல்ல.

சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட எந்த விரதங்களையும் பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்துவிடவேண்டும். "ஓம் தத் ஸத்" என்று பரப்பிரம்மத்தின் மூன்று நாமங்களைச் சொல்லிவிட்டு, எந்தவிதமான பூஜையையும் வேள்வியையும் செய்தோமானால் அது பகவானுக்கு அர்ப்பணம் என்று செய்வதாகும். ஆசாரியன் உபதேசத்தின் படி செய்ததாகும். "ஓம்" என்றால் 'இது பகவானுக்கு' என்று அர்த்தம். "தத்" என்றால் 'இதை நான் ஒரு பயனைக் கருதியும் அல்ல செய்வது' என்று அர்த்தம். "சத்" என்றால் 'இப்படி நான் சிரத்தையுடன் செய்வது மங்களமாகக் கடவது' என்று அர்த்தம். சிரத்தையுடன் செய்யப்படாத தவமும் விரதமும் தானமும் ஒன்றுக்கும் பயன்படாது.

**14, 15, 16** சுலோகங்களில் ஒரு முக்கியமான விஷயம் சொல்லப்படுகிறது :

தவம் என்பது சரீரத்தால் செய்யப்படுவது, வாக்கால் செய்யப்படுவது, மனத்தால் செய்யப்படுவதுஎன்று மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டது. சரீரத்தால் செய்யப்படும் தவம் பெரியோர்களுக்கும் குருக்களுக்கும் செய்யும் சேவை, உடல் சுத்தம், சீலம், பிரம்மசரியம், உயிர்களுக்கு இம்சை உண்டாக்காமை இவை. உண்மையும் பிறருக்குச் சந்தோஷம் உண்டாக்கும்படியானதுமான இனியபேச்சு வாக்குத் தவம். நல்ல நூல்கள் படிப்பதும் அதுவாகும். உள்ளத்து அமைதி, மௌனம் புலனைக் காத்து ஆணவத்தை அகற்றி அடங்குதல் மனத்தவம்.



சுப்பு:-என்ன இன்னிக்கு கேட்டையும், ஏவிளம்பியும் சேர்ந்தாபோலே பிறந்து இருக்காமே

குப்பு:- பயித்தியமா உமக்கு! ஏவிளம்பி பிறந்து 5மாசமாச்சே

சுப்பு:-அதெ சொல்லலே. இரட்டைபெண் பிறந்து இருக்காமே! இப்பநாகரீகபடி நக்ஷத்ரம், வருஷம் பேறு வையும்னு யோசனை சொல்றேன்.

# எங்களது இன்பச் செலவு

ஸ்ரீமான் T. S. ராஜகோபாலன், B.A., L.T.,
இந்து உயர்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி.

---

அக்டோபர்மாதம் 9ஆந் தேதி மாலை 5 மணி இருக்கும். எங்களது வண்டி உஜ்ஜயினியை அணுகியது. இந் நகரின் எல்லையில் ரயில் வண்டி, சிப்ரா நதியின் பாலத்தைக் கடப்பதைக் கண்டேன். அமரகவி காளிதாஸன் வருணித்துள்ள இந்துமதி சுயம்வரம் நினைவிற்கு வந்தது. நூற்றுக் கணக்கான ஆண்டுகட்கு முன் நிகழ்ந்ததைக் கண்டது என் அகத்துக்கண். மஹீபாலரத்தினங்கள் நூற்றுக்கணக்கான மஞ்சங்களில் நிரை நிரையாக அமர்ந்துள்ளனர், பொற்கொடியான இந்துமதியின் எழிலைக்கண்டுவியந்து. ஸுநந்தா, இந்துமதியை வரிசை வரிசையாக அழைத்துச் செல்லுகின்றாள்; மானஸ ஸரஸ்ஸில் காற்றினால் அலைக்கப் பெற்ற புனலில் அன்னப் பேடு தாமரை மலர்களை ஒவ்வொன்றாக அணுகுவதுபோல், பாவையும் ஒவ்வொரு மன்னனின் முன்னிலையிலும் நிறுத்தப்பெறுகிறாள். அவந்தி (உஜ்ஜயினி) மன்னனது பெருமையைக் கூறும் ஸுநந்தா

> அநேந யூநா ஸஹ பார்த்திவேந
> ரம்போரு! கச்சிந் மநஸோ ருசிஸ் தே!
> சிப்ரா-தரங்காநில-கம்பிதாஸு ||
> விஹர்த்து முத்யாந-பரம்பராஸு ||

[“வாழைத் தண்டைப்போல் தொடை வாய்க்கப் பெற்ற பாவாய்! சிப்ரா நதியின் அலைகளாலே எழுந்து இளங் காற்றால் அசைக்கப் பெற்ற பூம்பொழில் வரிசைகளில் யுவாவாகிய இம்மன்னனுடன் உலாவ உனக்கு விருப்பம் உண்டா?” என்பது கருத்து] என்றாள்.

இது நிற்க மேகஸந்தேசத்தில், மேகத்தைத் தனது ஆருயிர் நாயகியிடம் தூதாக அனுப்பும் யக்ஷன், இந்நகரின் எழிலைப்பற்றிக் கூறியதும், கோல்நிலை கோணாமல் இந்நகரைப் புரந்து பெயர் வாய்ந்த போஜன், விக்ரமார்க்கன் முதலியோருடைய சரிதங்களும், காமச் சுவையை முற்றும் நுகர்ந்து மனம் வெறுத்துத் துறவறம் பூண்ட, பர்த்ருஹரியின் சரிதமும் என் நினைவிற்கு வந்தன. அவந்தி என்ற இந்நகரம், நம் நாட்டில் புனிதமான தலங்களுள் ஒன்றாகும். “உஜ்ஜயினி” என்பதன் பொருள் “வெற்றி-நகரம்” என்பதாம். பரமசிவன், திரிபுராசுரனை வென்ற தலம் இதுவாகும். ஆண்டுதோறும் யாத்ரிகர்கள் ஆயிரக் கணக்கில் இங்கு வருகின்றனர். சிப்ரா நதிக் கரையில் இராமபிரான், தசரதனுக்குப் பிண்டம் இட்டதாகக் கருதப்படுவதால்,

மக்கள் இந்நதியில் நீராட வருகின்றனர். இங்குப் பன்னி ரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கும்பமேளா (மேளா— திருவிழா) நிகழ்கின்றது. இது பற்றிய சரிதம் வருமாறு. முன்பு தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெற்று அழி வில்லா வாழ்க்கையைப் பெறப் பாற்கடலைக் கடைந்த னர். கடலிலிருந்து ஒரு பொற் கலசத்தில் அமுதம் வெளி வந்தது; தேவர்களும் அசுரர்களும் இதைத் தாங்கள் தாங் களே பெறுவதற்காகச் சண்டையிட்டுக் கொண்டனர். தேவர்களது மன்னனின் மகனை ஜயந்தன் இந்தக் கல சத்தை வலியப் பற்றிக்கொண்டு வானை நோக்கிப் பறந் தான். தேவமானத்தால் பன்னிரண்டு நாட்கள் தேவர்க ளும் அசுரர்களும் ஜயந்தனைத் தொடர்ந்தனர். அப்போதப் போது நிகழ்ந்த கைகலப்பில் அமுதத்திவலைகள் உஜ்ஜ யினி, ஹரித்வார், அலஹாபாத், நாஸிக்-ஆகிய தலங்களில் சிந்தின. தேவர்களுக்குப் பன்னிரண்டு நாட்கள், நமக்குப் பன்னிரண்டு ஆண்டுகளாதலால், இந்த வரலாற்றின் நினை வாக இத்தலங்களுள் பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை கும்ப மேளா நிகழ்கின்றது.

உஜ்ஜயினி, சரித்திரப் பெருமை வாய்ந்தது. அசோ கர் இங்கிருந்து செங்கோல் செலுத்தினர். இவருக்குப்பின் விக்ரமாதித்யன் இதனைத் தலைநகராகக் கொண்டு பெரும் புகழ் எய்தினன். இங்குக் கவிஞர்களும், சிற்பம், இசை, முதலியவற்றுள் ஆற்றல் வாய்ந்தோரும் வாழ்ந்து வந்தனர்.

எங்களது ரயில் வண்டி, ஸ்டேஷனில் நின்றதும், நாங் கள் எங்களது பெட்டியிலிருந்து வெளிவந்து சுற்றிலும் உற்று நோக்கினேம். நகரம் பண்டை எழிலுடனே தான் விளங்கியது. ரெயில் ஸ்டேஷனையடுத்து வெளியில் டாங் காக்கள் வரிசையாக நின்றுகொண்டிருந்தன. இவை மெத்தைகளாலும், மேற்கட்டிகளாலும், துணி விரிப்பு களாலும் நன்கு அலங்கரிக்கப்பெற்றிருந்தன; இவற்று டன் இணைந்திருந்த குதிரைகள் மேன்மை வாய்ந்தவை; இவற்றைக் கண்டதும் "அக்ரேஸரைர்வாஜிபி:" (விரைந்து முன்னே செல்லும் குதிரைகளால்) என்ற காளிதாஸன் வாக்கு நினைவுக்கு வந்தது. 6 மணி சுமாருக்கு நாங்கள் நக ருள் நடந்து சென்றேம். அன்று மழை பெய்திருந்ததால் தெருக்களில் அளறு மிகுந்திருந்தது. கடைத்தெருக்கள் பெரும்பாலும் குறுகலானவை. எங்கும் புஷ்பக் கடைக ளும் பழக்கடைகளும் மிகுந்திருந்தன; மக்கள் கூட்டம் எங் குள் அதிகம். நாங்கள் நெடுஞ்சாலை வழியே நடந்து, கடைத்தெருப் பொது மன்றிற்கு வந்து சேர்ந்தோம். இந்த

இடம் விசாலமானது; பெரிய கடைகள் நாற்புறங்களிலும் அமைந்துள்ளன.

நடுவில் கோபால்ஜி மந்திர் உள்ளது. இது 1833ஆம் ஆண்டில் கட்டப்பெற்றது; இதன் கதவுகள் வெள்ளித் தகடு வேய்ந்தவை. விமானம் சலவைக் கற்களாலானது. கோயிலுக்குள்ளே ஒரு மஞ்சத்தில் நடுவே கோபாலன் எழுந்தருளியிருக்கிறார்; இடப் பக்கத்தில் உமாதேவியும் சங்கரரும் வலப் பக்கத்தில் பலராமனும் எழுந்தருளி யிருக்கின்றனர். அடியார்கள் கூட்டங் கூட்டமாகப் பழங்களும் மலர் மாலைகளும் கொண்டுவந்துஸமர்ப்பித்து அடிபணிகின்றனர். இந்தக் கோயிலிலிருந்து வெளிவந்ததும், காளேச்வரர் கோயில்அருகிலுள்ளது என்றார்கள், அந்த ஊரிலுள்ளவர்கள். மறுபடியும் எனக்கு ரகுவம்ச வர்ணனை நினைவுக்கு வந்தது. "மஹா காளேச்வாருடைய ஆலயத்திற்கு அருகில் வசிக்கும் இம்மன்னன், காளேச்வரருடைய தலையிலுள்ள பிறையின் ஒளியால், க்ருஷ்ண பக்ஷத்து இரவிலும் நிலவைப்பெற்றுப்பெண்டிருடன் களிப்பெய்துகிறான்" என்றாள் ஸுநந்தா, அவந்தி மன்னனைக் குறித்து. இத்தகைய பெருமை வாய்ந்த ஆலயத்தைப் பார்க்கவேண்டுமென்ற அவா எழுந்தது. கோயில் மிகவும் அண்மையிலுள்ளது என்றனர். அங்குச் செல்லும் வீதி குறுகியதாகவும், சரிவாகவும், இருளடைந்தும் இருந்ததால், ஒரு மைல் தூரம் எங்களுக்கு மிகத் தொலைவாகத் தோன்றியது; அன்றியும் தரையில் காலை வைக்க இயலாமல் வழுக்கலாகவும் இருந்தது. நாங்கள் மிகவும் சிரமப்பட்டு 8 மணிக்கு ஆலயம் சேர்ந்தோம். ஆலயம் மிகப் பெரியது. ஆலயத்திற்கு எதிரில் பெரியதொரு குளம், நான்கு பக்கங்களிலும் படித்துறைகளுடனும் மண்டபங்களுடனும் விளங்கியது. காளேச்வரமூர்த்தி—மஹாலிங்கம்—நில மட்டத்தின் கீழ் ஓர் அறையில் கோயில்கொண்டுள்ளார்; ஒரு மண்டபத்தின் சாரளத்தின் வழியே காட்சியளிக்கின்றார். பிராகாரத்தில் பாழடைந்த பிம்பங்கள் காட்சியாக வைக்கப்பெற்றுள்ளன.

மறுநாட் காலையில் நாங்கள் சிப்ரா நதியில் நீராடச் சென்றோம். முதல் நாள் பெய்த மழையினால் நதியில் தண்ணீர் நிரம்பப் பாய்ந்தது; சிறிது கலங்கலாகவும் இருந்தது. படித் துறைகளில் யாத்ரிகர்கள் ஏராளமாகக் கூடியிருந்தனர். அவர்களுள் பலர் வைதிக முறையில் மந்திர பூர்வமாக நீராடினர். பெண்டிர் புஷ்பம், பழம் முதலிய உபகரணங்கள் கொண்டு நதிக்கு வணக்கஞ் செய்தனர். ஆற்றில் ஆமைகள் அதிகம்; யாத்ரிகர்கள் இவற்றிற்குக் கோதுமை மாவு உருண்டை அளிக்கின்றனர். ஆற்றின் கரையில்




இரண்டு ஆலயங்கள் உள்ளன. எதிர்கரையில் தத்தாத்திரேயர் ஆலயம் உள்ளது. இவற்றுள் இறைவனை வணங்கி, நாங்கள் குறுகிய பாதை வழியே காளி கோயிலுக்குச் சென்றோம். இங்குள்ள மாகாளியம்மன், விக்கிரமார்க்கன் வணங்கியவளாவாள். உள்மண்டபத்தின் சுவர்களில்காளி தேவியின் மூர்த்தி பலவகையாகஓவியத்தில் திகழ்கின்றது. ஸந்நிதிக்கு எதிரில் பெரியதொரு பலிபீடமும், 60 அடி உயரத்திற்கு தீபஸ்தம்பம் ஒன்றும் உள்ளன. தீபஸ்தம்பத்தில் நூற்றுக் கணக்கான தீபங்கள் உள்ளன. திருவிழாக்காலத்தில் இந்த விளக்குகள் யாவும் ஏற்றப்படும்.

இங்கிருந்து கீழ் நோக்காகச் சரியும் பாதை ஒன்றில் ஒரு பர்லாங்க் தொலைவில் மஹாகணபதியின் ஆலயம் உள்ளது. கோயிலில் கணபதி 8அடி உயரத்திற்கு வீற்றிருந்த திருக்கோலத்தில் உள்ளார். இம்மூர்த்திக்கு எதிரில் வ்யாஸ பகவான் அமர்ந்திருக்கிறார். உள்ளே யுள்ள மண்டபத்தில் வெண்கலத்தில் ஐந்து தலைகளுடன் ஹநுமானும் கண்ணனும் எழுந்தருளியிருக்கின்றனர். இம் மண்டபத்தில் கண்ட கண்ட இடமெல்லாம் விக்ரஹங்கள் உள்ளன. இக் கோயிலிலிருந்து காளேச்வரர் கோயில் ஒரு பர்லாங்தூரத்திலேயே உள்ளது. நாங்கள் இந்தக் கோயிலுக்கு மறுபடியும் சென்று இறைவனை வழிபட்டு, ரெயில் வே ஸ்டேஷனுக்குத் திரும்பினேம். (தொடரும்)

# அன்பு வெள்ளம்

வை. மு. பத்மினி ஸ்ரீனிவாஸன்.

நாள் பூராவும் உழைத்துவிட்டு, சூரியதேவன் சோர்வுடன் மலைவாயை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். அந்தியின் தங்க நிறக் கிரணங்கள் உலகத்திற்கே ஒரு தனி அழகை அள்ளி வீசின. அந்தியின் அழகும் குளுகுளுப்பான காற்றும் சேர்ந்து, அங்கு இருக்கும் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் தனிக் குஷியை உண்டாக்கியது. தங்களையே மறந்த சிறுவர்கள் தெருப் பூராவும் கோஷம் கிளப்பி ஆரவாரித்தவாறு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

இந்திரா வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு வீதியில் விளையாடும் குழந்தைகளை ஆனந்தமாய்ப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள். ஒருபுறம் சிறுபிள்ளைகளாய் கோலியாடிக் கொண்டிருந்தார்கள். ஒருபுறம் சிலர் பலிச்சப்பளாம்...மற்றொரு புறம் சில பெண் குழந்தைகள் பாண்டி—இப்படியாய்ப் பிரிவுப் பிரிவாய்க் குழந்தைகள் சிரித்த முகத்தோடு ஆடுவதைப் பார்க்கப் பார்க்க இந்திராவின் இதயம் சந்தோஷத்தால் நிரம்பியது. ஆனால், மற்றொருபுறம்...நமக்கும் ஒரு குழந்தை இருந்தால் இந்த குழந்தைகளில் ஒன்றாய் இருக்குமல்லவா? அந்த பாக்கியம் நமக்கு இல்லையே...என்று எண்ணும்போது, அவளை அறியாது சங்கடம் செய்தது. அங்கு நிற்கமாட்டாது ஈஸிச்சேரில் மௌன மாய்ம் போய் விழுந்தாள். அவள் எண்ணம் பூராவும் கடந்த நாள் களை நினைத்துத் தாவியது.

இப்போது தான்போல் இருக்கிறது...இந்திராவுக்குக் கல்யாணம் ஆகி 10 வருஷங்கள் ஓடி மறைந்து விட்டன! அவள் தாய்க்கு அருமையாய்ப் பிறந்த ஒரே மகள். ப்ரமாண்டமான செல்வந்தர் வயிற்றில் பிறந்து அவ்வளவு சொத்துக்கும் அதிகாரியாய் விளங்கினாள். அவள் கணவன் சேதுராமனும் நல்ல நிலையில் உயர்ந்த உத்யோகத்தில் இருந்ததால் இந்திராவை அவனுக்கு கல்யாணம் செய்து கொடுத்தார்கள். இந்திராவின் மாமியாருக்கு சேதுராமன் ஒரு பிள்ளையும் இரண்டு பெண்களுந்தான் பிறந்தவர்கள். தன் ஒரே அருமை மகனுக்கு நிறைய சொத்தோடு அறிவும் அழகும் படைத்த பெண் கிடைத்தது, அவளுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. மருமகள் நடந்தால் கூட கால் தேய்ந்துவிடும் என்று கண்ணில் வைத்து இமையில் மூடிக் காத்து வந்தாள்.

இந்திரா புக்ககம் வந்து பத்து வருடங்கள் கொட்டைப் பாக்காய் உருண்டது. அந்த பத்து வருஷங்களில்தான் எவ்வளவு மாறுதல்கள்! தன்னிடம் உயிரையே வைத்திருந்த அதே மாமியார் ஒரு குழந்தை பிறக்கவில்லை என்ற காரணத்தால் எப்படித் தான் மாறிவிட்டார். அதே சிந்தனை சுழலில் சிக்கி இந்திரா தவித்தாள்...அந்த சமயம் உள்ளே வந்த வேலைக்காரி "என்னம்மா உடம்புக்கு" என்று கேட்டாள்.

"உடம்பு ஒன்றும் இல்லை கண்ணம்மா. வாசலில் குழந்தைகள் எல்லாம் விளையாடுவதைப் பார்த்து என் பழம் கதைகள் எல்லாம் நினைவுக்கு வந்தது. நினைத்து குழம்புகிறேன்.

"பழம் கதையா! அது என்னமா" என்று கேட்டாள்.

நெஞ்சில் அழுத்தி கொண்டிருந்த பாரத்தை குறைத்தால் போதும்போல் நினைத்த இந்திரா மடைதிறந்த வெள்ளம்போல் சொல்ல ஆரம்பித்தாள்.

குழந்தை பிறப்பதும் பிறக்காததும் நம் கையிலா இருக்கிறது? எனக்குக் குழந்தை பிறக்கவில்லை என்ற காரணத்தால் என்னிடம் இருந்த அன்பு பூராவும் வெறுப்பாய் மாறியது என் மாமியாருக்கு! அப்பப்பா!......என்னைக் கண்டால் அவர் முகத்தில்தான் எத்தனைவித உணர்ச்சிகள் தோன்றும்! ஏதோ ஒரு குறைச்சொல் அவர்வாய் முணுமுணுத்துக் கொண்டே இருக்கும். என் தாய்க்குக்கூட எனக்குக் குழந்தை இல்லையே என்ற குறை அவள் மனதை அழுத்தியது ஆனல், அவள் என் மாமியாரைப்போல் என்னை வெறுக்கவில்லை. யாராவது வாய் தவறி, 'என்ன, உன் நாட்டுப் பெண்ணுக்கு எத்தனை குழந்தைகள்?'......என்று கேட்டுவிட்டால் போதும்!...ராம...ராம...அவர் வாயிலிருந்து வரும் பாணங்களைக் காதால் கேட்க முடியாது. பிறக்க இருந்த குழந்தையை யாரோ தடுத்து விட்டதுபோல் குற்றமும் கொடூரமுமாய்ப் பேசுவார். அதோடு மட்டும் இல்லை; "ஆமாம், அவள் அம்மா எனக்குப் பெண்ணையா பெற்றுக் கொடுத்தாள்!...ஏதோ பொழுது போக்கிற்கு விளையாட ஒரு மரப்பாச்சி பொம்மையைப் பெற்றுக் கொடுத்திருக்கிருள்! என் விதி, அந்த பொம்மையை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறேன்" என்று ஆத்திரத்தோடு சொல்லுவார். அதைக் கேட்கும்போது என் மனம் வேதனையால் தவிக்கும். அவர் மனம் சந்தோஷித்தால் போதுமென்று அவர் ஆட்டிவைத்த ஆட்டத்திற்கெல்லாம் ஆளானேன். எவ்வளவு விரதங்கள்!...எத்தனை பட்டினி;...எத்தனை புண்யக்ஷேத்திரங்கள் யாத்திரை!—ஒன்று பாக்கியில்லாது அலுப்புத் தீரச் செய்தேன்; ஆனல், பலன்தான் பூஜ்யம்!

ஒருதினம் காலை நான் தூங்கியெழுந்து வெளியே வந்தேன், அதே சமயம் என் மாமியாரும் எழுந்து படுக்கையைச் சுற்றிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததுதான் தாமதம்!...அவர் முகம் கோபத்தால் சிவந்தது!

"ஐயோ, ராமா! உன் முகத்திலா விழித்தேன்? சின்னக் குழந்தையின் முகத்தில் விழித்தால் எவ்வளவோ புண்ணியம் சொல்லியிருக்கிறது. போயும் போயும் இன்று இந்த மலடியின் முகத்திலா விழிக்கவேண்டும்!" என்று வெடுக்கென்று சொன்னர்.

என் காதில் ஈயத்தை உருக்கி வார்த்தால் கூட அவ்வளவு சங்கடம் செய்திருக்காது!...அவ்வளவு வேதனையை உண்டாக்கியது. துக்கத்தை அடக்க முடியாது வெந்நீர் அறையில் சென்று

தாழ்ப்பாள் இட்டுக்கொண்டு துக்கந்திரக் கதறினேன். "பகவானே! என்னை எவ்வளவுநாள் இப்படி வாட்டப் போகிறுய்?'' என்று மனமுருகி வேண்டினேன், அன்று பூராவும் நடைச்சவம் போல் என் காரியங்களைச் செய்தேன். ஆனால், என் உள்ளம் என்னவோ, தாமரை இலைத் தண்ணீர்போல் தத்தளித்துக் கொண்டிருந்தது. அன்று பூராவும் என் முகவாட்டத்தைக் கவனித்த கணவர், "இந்திரா! ஏன் இன்று ஒருமாதிரி இருக்கிறுய்? உடம்பு ஏதாவது சரியில்லையா?'' என்று அன்பாய் என்னை அரவணைத்தவாறே கேட்டார். அவ்வளவுதான் தாமதம்!...என் இதய பாதாளத்தில் இவ்வளவு நாள்களாய்ப் புதைந்து கிடந்த துக்கம் குபீரென்று கிளம்பி என் உடலையே ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது. சிறு குழந்தையைப் போலத் தேம்பித்தேம்பி அழுதேனே தவிர ஒரு வார்த்தைகூட என்னால் பேச முடியவில்லை.

மெள்ளச் சமாளித்துக் கொண்டு, அன்று இவ்வளவு நாளாய் நடக்கும் நிகழ்ச்சியைச் சொல்லி, "என்னால் இந்த ஹிம்சையைச் சஹிக்க முடியவே முடியாது. பொழுது விடிந்தால் அஸ்தமித்தால் இதே ரோதனையாய் விட்டது. இன்னும் உங்கள் தங்கைமார்கள் பிரஸவத்திற்கு வேறு வந்துவிட்டால் இன்னும் ஹிம்சை பொறுக்க முடியாது போய் விடுகிறது! இதையெல்லாம் நினைத்தால் பேசாமல் என் பிறந்தகத்துக்குப் போய் நாலாறு மாதம் நிம்மதியாக இருந்துவிட்டு வரலாமா என்று தோன்றுகிறது. ஆனால்...உங்களைப் பிரிந்து இருக்கவும் முடியவில்லையே. ஆதலால் எதையும் சஹித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மரப்பாய்ச்சி பொம்மை, மலடி...இந்த இரண்டு வார்த்தைகள் தான் என்னால் கேட்கவே முடியவில்லை. என்ன, கல்யாணம் ஆகி பத்து, இருபது வருஷம் ஆகிவிட்டதா?......இனி குழந்தையே பிறக்காது என்று ருஜுவாகி விட்டதா?...இது என்ன ஹிம்சை! எவ்வளவு நாள்தான் இதைக் கேட்பது?...என் பொறுமையும் கூட எல்லை மீறி விடுகிறதே!'' என்று துக்கம் தீரச் சொல்லி அழுதேன்.

இதற்கு ஐயர், ஒரு சோகச் சிரிப்பு சிரித்துவிட்டு, இந்திரா! இதற்கே நீ இப்படி அழுகிறுயே!...என்னை அம்மா எவ்வளவு ஆட்டி வைக்கிறுள் தெரியுமா?...அது மட்டும் நீ உங்க பிறந்த வீட்டுக்குப் போகாததே நல்லது...இனி உனக்குக் குழந்தையே பிறக்காதாம். நீ பெண் மலடாம், எனக்கு நல்ல பெரிய குடும்பத்துப் பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கிறுளாம்.... குடும்பம் விளங்க வேண்டாமா?...என்று தினம் நச்சரிக்கிறுள். அம்மா...சட்டம், ஜாக்கிரதை! ஒருவன் இரண்டுபேரை மணந்தால் கம்பி எண்ண வேண்டியதுதான் என்று பயப்படுத்திக் கொண்டே வருகிறேன்...இப்போது என்னடா...என்றால், என் சின்னத்தங்கை பிள்ளையை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளச் சொல்லி உபத்ரவிக்கிறுள். அதற்காகத்தான் எனக்கு பட்டணத்திற்கு மாற்றலுக்கு ஏற்பாடு செய்து விட்டேன். இன்னும்

இங்கு ஒருவாரம்தான்'' என்று சொல்லி எனக்குத் தயிரிய மூட்டினார்.

ஒருவாறு அந்த நரகத்தில் இருந்து கிளம்பி பட்டணம் வந்து சேர்ந்தோம். இங்கு தனியாய் வேலை செய்வது, சாப்பிடுவது, பொழுது போகாது உலாவிக் கொண்டிருந்தாலும் சாயங்கால வேளையில் தெருவில் குழந்தைகள் கும்மாளமடித்து விளையாடுவதைப் பார்ப்பதே என் மனதில் நிம்மதியை உண்டாக்கியது.

அதைப் பார்ப்பதையே ப்ரம்மானந்தமாக எண்ணும் எனக்கு இன்று ஏன் இந்தப் புதிய எண்ணம் உண்டாக்வேண்டும்? அதே அதிர்ச்சியில் எவ்வளவு நேரம் உட்கார்ந்திருந்தேனோ, எனக்கே தெரியாது' இப்போதுதான் என் மாமியார், என் அம்மா இருவரின் ஏக்கத்தின் எதிரொலி தெரிந்தது. பாவம்... என் மாமியாரின் உள்ளத்தில் எவ்வளவு ஆசைகள் இருந்தால் அவ்வளவு வேதனைப்பட்டிருப்பார்?...இப்படி சமுத்திர அலைகள் போல் பலவிதமான எண்ணங்கள் சூழத் திணறி வார்த்தைகள் வெளி வந்தது. அதே சமயம் அவள் கணவர் வந்தார், கண்ணம்மா எழுந்து சென்று விட்டாள்.

ஆபீஸிலிருந்து சேது வந்து, "இந்திரா! இந்திரா!'' என்று அழைத்தபோதுதான் உணர்வுபெற்று அலறியவாறு எழுந்தாள்.

''என்ன, இந்திரா! பலமான யோசனையில் ஆழ்ந்திருக்கிறாய்? எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசனை?'' என்று கேட்டார்.

''ஊம்!...யோசனையும் இல்லை, ஒன்றும் இல்லை. வீதியில் குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். திடீரென்று, ஏனோ, நமக்கும் ஒரு குழந்தை இருந்தால் அந்தக் கூட்டத்தோடு விளையாடிக் களிக்காதா?...என்று ஏக்கம் தோன்றியது. ஏதோ பழங்கதைகளையெல்லாம் நினைத்துக் கொண்டு குழம்பினேன். இப்போதுதான் பாவம், உங்க அம்மாவின் ஏக்கம் எவ்வளவு தூரம் இருக்குமென்று நன்றாய்த் தோன்றுகிறது...என்று நான் கூறி முடிப்பதற்குள், "சரி, சரி, வீணாய்க் குழம்பாதே! வா, எங்காவது வெளியே போய் வரலாம்'' என்றான் சேது. உடனே வெளியே கிளம்பினாளே தவிர மனம் குழந்தைகளையே சுற்றி வட்ட மிட்டது. அவர் பத்தடி சென்றால் இவள் இரண்டடி செல்லவும் தடமாடி தவித்தாள்.

அதேசமயம் குழந்தைகள் எல்லோரும் தங்கள் இனிய குறலில்,

" தட்டாமாலை தாமரைப்பூ சுற்றிசுற்றி சுண்ணாம்பு
தட்டான் வீட்டில் கல்போடு என் கையிலே பூப்போடு
பட்டுகுட்டை வாங்கிகொடு கட்டிக்கொண்டு ஓடிடுவேன் "

என்ற பாட்டை பாடிக்கொண்டு கம்பத்தை சுற்றி சுற்றி வரும் பேரொலி இவள் செவிகளில் நாதவெள்ளமாய் பாய்ந்து மேலும் அவள் கால்களை காந்தம்போல் இழுத்து நிறுத்தின. (தொடரும்)

# காளிதாஸர் கனவு

## 11, இராம தர்சனம்: ரகுவம்சம்.

[ஸ்ரீ. கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

திலீப மகாராஜன் குற்றவாளிகளை உலக நன்மைக்காக தண்டித்தாலும் மக்கட் பேற்றுக்காகத் திருமணஞ் செய்துகொண்டதாலும் அவனுக்கு பொருளும் இன்பமும் அவனுடையச் சுயநல மற்ற செய்கையால் அறமாகவே மாறிவிட்டன. உலகத்திலுள்ள பொருட்களை அவன் வேள்விகளைச் செய்து தேவர்களை மகிழ்விக்க உபயோகப்படுத்தினன். அச் செய்கையால் தேவர்கோனை இந்திரன் தேவலோகத்திலிருந்து மழையைப் பொழிந்தான். இப்படி ஒருவர்க்கொருவர் உதவி செய்ததால் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் பெருமையுடன் விளங்கச் செய்தார்கள். ஏனைய அரசர்களால் அவனுடைய புகழை நெருங்க முடியவில்லை. உலகத்தில் யாவரும் பிறர்களுடைய பொருளை விரும்பாததால் திருட்டுத்தனம் சொல்லில் மட்டும்தான் இருந்தது. மருந்து எப்படி நோயாளிக்குக் கசந்தாலும் அது செய்யும் நன்மைக்காக விரும்பப்படுகின்றதோ அப்படி அரசனுடைய பகைவன்கூட நல்லவனாக இருந்தால் அரசனால் தோழனாகக் கருதப்பட்டான். கெட்டவன் அன்பனாக இருந்தாலும் பாம்பினால் தீண்டப்பட்ட விரல்போல் நீக்கப்பட்டன. அந்த அரசன் பஞ்ச பூதங்கள் (வானம், காற்று, தீ, தண்ணீர், பூமி) தன்னலமின்றி பிறர்களுக்காக வாழ்கின்றனவே அப்படி வாழ்ந்தால் அவனைப் பஞ்சபூத உருவமாகக் கூறலாம்.

ஸ்தித்யை தண்டயதோ தணட்யான்
பரிணேது: ப்ரஸூதயே |
அப்யர்த்த காமௌ தஸ்யாஸ்தாம்
தர்ம ஏவ மனீஷிண: ||
துதோஹ காம் ஸயஞ்ஞாய
ஸஸ்யாய மகவா திவம் |
ஸம்பத் விநிமயேனோ பௌ
தததுர் புவனத்வயம் ||
நகிலானுய யுஸ் தஸ்ய
ராஜானோ ரக்ஷிதுர்யச: |
வ்யாவ்ருத் தாயத் பரஸ்வேப்ய:
ச்ருதௌ தஸ்கரதாஸ் திதா ||
த்வேஷ்யோபி ஸம்மத: சிஷ்ட:
தஸ்யார் தஸ்யய தௌஷதம் |
த்யாஜ்யோ துஷ்ட: ப்ரியோப்யாஸீத்
அங்குலீவோரக க்ஷதா ||

தம்வேதாவிதவே நானம்
மகாபூதஸ மாதிஞ |
ததாஹி ஸர்வே தஸ்யாஸன்
பரார்த்தை கபலா குணா: ||

அவனுடைய பட்டமகஷி (அரசி)க்கு தக்ஷிணுதேவி என்று பெயர். அவளும் ராஜ்ய லக்ஷ்மியுந்தான் அவனுடைய மிக முக்கியமான மிகப் பிரியமான இரு மனைவிகள். அவர்களுக்கு மக்கட் பேறு இல்லாததால் அக்குறையைத் தீர்த்துக்கொள்ள அவர்கள் வசிஷ்ட மகரிஷியின் ஆசிரமத்திற்குச் சென்றார்கள். ஆசிரம அமைதிக்குக் கேடு வரும் என்று அச்சப்பட்டு அரசன் தன் படைகளை அவ்விடத்திற்கு அழைத்துச் செல்லவில்லை. அவர்கள் ரதத்தில் ஏறிச் சென்றார்கள். நெற்பயிரிலிருந்தும் மலர்களிலிருந்தும் காற்றால் கொண்டு வரப்பட்ட நறுமணத்தை முகர்ந்து இன்புற்றுப் பிரயாணஞ் செய்தார்கள். ரதத்தின் ஒலி முகில் ஒலி போலிருந்ததால் மகிழ்ந்து ஒலித்த மயிலின் ஒலிகளைக் கேட்டு மகிழ்ந்தார்கள். மான்களுடைய கண்கள் தங்களுடைய கண்களை ஒத்திருந்ததால் மகிழ்ச்சியடைந்தார்கள். தோரணத்தை ஒத்து பறந்த ஸாரஸப் பறவைகளின் கூட்டத்தைத் தலையைத் தூக்கிக் கவனித்துப் பார்த்தார்கள். ரதம் வெகு வேகமாகச் சென்றதால் குதிரைகளின் கால்களால் எழுந்த புழுதி அவர்களுக்கு மாசை உண்டாக்கவில்லை. காற்று இன்பமாக இருந்ததால் தாங்கள் விரும்பிய காரியம் பயனடையும் என்றுணர்ந்து இன்பமெய்தினார்கள். தங்களுடைய மூச்சுக் காற்றுப் போல் நறுமணம் நிறைந்த தாமரை மலர்களிலிருந்து வந்த குளிர்ந்த காற்றை ரஸித்தார்கள், தங்களால் தானமாகக் கொடுக்கப்பட்டக் கிராமங்களில் இருக்கும் பெரியார்களுடைய ஆசியைப் பெற்றார்கள். போகும் வழியில் பொதுஜனங்கள் காணிக்கையாக யளித்தப் புது நெய்யை அவர்கள் பெற்று மகிழ்ந்தார்கள். அரசனும் அரசியும் சந்திரனும் சித்திரை நக்ஷத்திரம் போல் விளங்கினார்கள்.

அவர்கள் வசிஷ்டருடைய ஆசிரமத்தை யடைந்த பிறகு அந்த மகர்ஷி அவர்களுக்குத் தக்க மரியாதை செய்து "சுகமா இருக்கின்றீர்களா?" என்று வினவினர். அப்பொழுது அரசன் "எல்லா கேடுகளையும் நீக்கும் வல்லமையுள்ள நீங்கள் அருள் புரிவதால் எங்களுக்குக் குறைகளே இல்லை. உங்களுடைய ஆசிகளால் வெற்றி பெற்ற எனக்கு என் அம்புகளால் ஆக வேண்டியது ஒன்றுமில்லை. உங்கள் வேள்வியின் ஆற்றலால் நிறைய மழை பொழிவதால் எங்கள் நாட்டில் பஞ்சமே கிடையாது. எங்கள் தேசத்தில் வாழும் மக்கள் வெகுகாலம் சுகவாழ்வாக வாழ்வதற்கு நீங்களே மூலகாரணம். பிரம்மாவின் புதல்வனை நீங்கள் எங்களுக்கு அருள் புரிவதால் குறையற்ற செல்வம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆனல் எங்களுக்கு மக்கட் பேறு ஏற்படாததால் நாடு அரசனற்றுப் போய்விடுமே என்று மனத்தாங்கல் ஏற்பட்டிருக்கின்றது. ஆகையால் எங்கள் முன்னேர்களுக்கு தர்ப்

# உங்கள் செல்வம்

"காரும் பங்களாவும், மாடும் கன்றுமாய் குளுகுளு வென்று குழந்தைகளுடன் வாழக் கொடுத்த வைக்காத ஜன்மம், வீடு வீடாக ஏறி வேலை செய்கிறாளே. அவள் தலையெழுத்து அப்படி" என்றாள் ஒருத்தி.

"யாரைச் சொல்கிறாய் யார் அந்த அதிர்ஷ்டசாலி?" என்றாள் மற்றொருத்தி.

"உனக்குத் தெரியாதா அந்தக் கதை. அதோ நிற்கி றாள் பார் பறட்டைத்தலை மனுஷி. அவளேதான். அவள் சாதாரணக்குடும்பத்தில் பிறந்து சுமாரான இடத்தில் வாக் கப்படாலும். அதிர்ஷ்ட தேவதையின் அருளால் குடும்பம் பாலாய் பொங்கியது. குழந்தைகளும், செல்வமும் கொ ழித்து குலுங்கும்போது, அவள் கணவர், விதிக்கு வசமாகி மாண்டார். பிள்ளைகளுடன்படிப்பிற்காகப் பட்டணம் வந்த வள் குழந்தைகளையும் துறந்து, பலகெட்டவழிகளில்சென்று குழந்தைகளையே துறந்தாள்.

"அது எப்படி மனம் வந்தது இரண்டு குழந்தைகளைப் பிரிய? அதுவும் முத்துபோல் ஆண்குழந்தைகள்".

"பெரிய பிள்ளையைப்போல் யாரும் அகப்படமாட்டார் கள். தன் தந்தைக்குத் தெரிந்தவர்கள், மூலம், தந்தை விட்டுச் சென்ற பணத்தை வைத்துக்கொண்டு, படித்து பட்டம் பெற்றான். தம்பியை சீரிய முறையில் பழக்கினான். இருவருமாகச் சேர்ந்து ஒரு வியாபாரம் துவக்கினர். முயற் சியின் பலன் கிடைத்தது. சென்னையிலேயும், சொத்துகள் சேர ஆரம்பித்தன. பையன்களின் அழகும், பணமும் எல் லோரையும் மயக்கி, பெண்மேல் பெண் வந்தது கல்யாணத் திற்கு... ஆனல்... கடைசியில் இவள் கதையை அறிந்து... சை ...சை... ஓடிப்போனவள் பிள்ளைக்கா என் பெண்ணைக் கொடுப்பேன். நெறி கெட்டவளின் பிள்ளை... இவன் குணம் எப்படியோ.... இப்படி பலவாறாகக் கூறி விட்டு விடு வார்கள். பையன்களின் உள்ளம் முறிந்தது. மனமாரத் தா யைச் சபித்தார்கள். நல்லவர்களுக்கு முதலில் சோதனை யைக் கொடுத்தாலும் பிறகு, கடவுள் கருணை காட்டி

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பணம் சிராத்தம் இல்லாமல் பேர்யவிடும், ஆகையால் நான் செய் யும் தர்ப்பணங்களை அவர்கள் கண்ணீர் பெருக்கிக்கொண்டே ஏற்றுக் கொள்கின்றார்கள். நல்ல மக்களில்லாவிட்டால் மறுமை யில் இன்பம் ஏது? இம்மையிலும் மறுமையிலும் அவர்களால் தான் ஏற்படும். ஆகையால் இந்தப் பெருங்குறையை நீங்கள் தயை கூர்ந்து தீர்த்துவைக்க வேண்டும்" என்று வணக்கத் துடன் கூறினான்.

(தொடரும்)

ஞர். அவன் படித்த கல்லூரி உபாத்தியாயர் முன் வந்தார். 'தாயும் பிள்ளையும் ஒன்ருனலும் வாயும் வயிறும் வேறு' என்ற பழமொழிபடி, தாயின் குணத்தால்—பிள்ளை நல்லவனுயிருந்தாலும், அவன் வாழ்வு கெடுவதை அவரால் கண்டு சகிக்கமுடியவில்லை. தன் பெண்ணை மணம் முடித்தார். இப்போது தம்பதிகள் சந்தோஷமாக வாழ்கின்றனர். தம்பியும் ஒத்துமையாக யிருக்கிருன். பார்க்க சந்தோஷமாக இருக்கிறது.

''நமக்கிருந்து என்ன? தாய் இருந்தும் பரதேசிபோல் தானே அந்த பையன்கள் இருக்கவேண்டியிருக்கிறது ஐயோ, இப்படியும் ஒரு பாசமற்ற கட்டை, இருக்குமோ?''

"பாசமற்ற கட்டையா...முழு கதையும் கேள். அந்த பிள்ளையும் அவன் மனைவியும் தினந்தோறும் இந்த வழியாக இந்த நேரத்தில்போவார்கள்.அதைப்பார்க்கத்தான் இங்கு நின்றிருக்கிருள். அந்த பிள்ளை அவளைச்சேர்க்கவேயில்லை.''

"பின் எப்படி சேர்ப்பான். திருந்திவிட்டாலும், பழையது மறந்துவிடுமா?

இப்படி ஊர் பலவாருக் கூட்டங்கூடி; மூலை மூலையாகப் பேசத் தொடங்கியது. இவையெல்லாம் மங்களம் என்ற பெயருடைய அந்த பறட்டைதலை மனுஷியின் காதில் மட்டும் விழவில்லையா? நன்ருக விழுந்தது முதலில் அறியாமையின் வேகத்தில் செய்த தவறை உணர்ந்து குறுகிஞள். பிள்ளையிடம் சென்று வாழ நெஞ்சு விழைந்தது. உடல் துடித்தது.

என்றும் போல்அன்றும் மங்களம் மகனும்-மருமகளும் முன் பக்கத்திலும். சிறியபிள்ளை பின் பக்கத்திலும் அமர்ந்து செல்லும் அழகை பாசத்துடன் கூடிய ஏக்கத்துடன் நோக்கினள். மற்றைய நாளைவிட அவள் துயரம் அன்று ஏனே அதிகரித்திருந்தது. காரும் சென்றுவிட்டது.

அவர்கள் வாழும் பங்களாவைக் கண்டுபிடித்து சில நாட்கள் தான் ஆயிற்று. எத்தனையோ தூது விட்டும் பயனில்லாது போகவே, அன்று தானே நேராகப் போவது எனத் தீர்மானித்தாள்.

வெளியிலிருந்து வந்தவர்கள் 'அப்பாடா' என்று அமர்வதற்குள் ஏதோ 'தடால் என்று கேட்டது. இருவரும் திடுக்கிட்டு நோக்கினர். அவர்கள் காலடியில்—ஒரு மாது—அவன் தாய் மங்களம்!

"கண்ணு! என்னை மன்னித்து இந்தப் புழுவை ஏற்றுக்கொள், தாயே மகன் காலில் விழக்கூடிய நிலையை நானே செய்துக்கொண்டேன். நான் செய்ததை மறந்து

விடு. இப்போது பணத்துக்கு—சுகபோகத்துக்கு ஆசைப்பட்டு வந்திருப்பதாக நினைக்காதே. திருந்திவிட்டேன். அந்நினைவுகளை என் மனதை விட்டு அகற்றிவிட்டேன். ஏற்றுக்கொள். பாசம் என்னைக் கொன்றதுபோதும்'' என்ற அலறலும் தொடர்ந்தது.

மங்களத்தின் 'மகனுக்'கு பாசம் ஒருபுறமிருந்தாலும், அந்தத் தாயையா ஏற்றுக்கொள்வது? என்ற எண்ணத்துடன் வெறுப்பை உமிழும்விழிகளுடன் நோக்கினான். ஆனால் அவள் காலில் விழுந்தது அவனைப் பதறச் செய்துவிட்டது. அவன் மனைவி சற்று ஒதுங்கிநின்று குழம்பினாள்.

பிறகு ''அம்மா! எழுந்திருங்கள். என்ன இருந்தாலும் அவர் உங்கள் செல்வம். என்றாள் அமைதியாக.

மங்களம் தம்பித்தாள், அதற்குமேல் அவள் மகன் ப்ரமித்தான்.

---

# சதாபிஷேக மகோத்சவம்



''தோன்றிற் புகழொடு தோன்றுக'' என்றார் தீர்க்கதரிசியான வள்ளுவர். உலகில் கோடிக் கணக்கான மக்கள் பிறந்தாலும் வள்ளுவரின் வாக்கின்படி புகழ்ச்சிகரத்தில் ஆரோகணிக்க தக்க முறையில் எங்கோ ஒரு சிலர் தான் பிறந்து செயற்கரிய செயல்களைப் புரிந்து கோட்டையின் மீது இட்ட விளக்குப்போல் ப்ரகாசிக்கின்றார்கள். அவ்வகையில் நமது **ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்** ஒரு ப்ரதான ஜோதி ஆவார். உலகத்தில் பாஸ்கரன் இருளை நீக்கி ஒளியை அளித்து மக்களுக்கு அபார உற்சாகத்தையும் உபயோகத்தையும் அளிப்பதுபோல் **ஞான பாஸ்கரன்** என்ற பட்டம் பெற்ற ஸ்ரீமான் சாஸ்திரியார் தாம் கற்ற பல பாஷைகளின் மூலம் மக்களின் அக இருளை அகற்றி பொதுநல சேவையின் சிறப்பை அறிவுறுத்தி, தாமே செய்தும் காட்டி மகோபகாரம் செய்கின்ற வள்ளல் என்றால் அவருக்கேத் தகும். அத்தகைய பெரியார் கலைச்செருக்கோ, செல்வத்தின் கர்வமோ இல்லாமல் 'நிறை குடம்'நீர் தளும்பாது' என்ற உண்மையை நிதர்சனமாக எடுத்துக் காட்டுகிறார். அவருடைய விடா முயற்சியும், தளராத உழைப்பும், சலிக்காத உற்சாகமும் பூர்ண த்ருப்தியும் கூடிய அஸ்திவாரமே அவர் இன்று **சதாபிஷேகம்** செய்துக் கொள்ளக் கூடிய நிலையை அமைத்தது. அப்பெரியார் சென்றது போக இன்னும் பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கும், மக்களுக்கும் நல்லன செய்ய அருள் புரியுமாறு ஜெகதா சாரியனை வேண்டுகிறோம்.




லக்ஷ்மிக்கு தன்னிலேயே புரியவில்லை. என்ன ஊமத்தங்காயைக் கொடுத்தா...நம்மைப் பைத்தியம் பிடித்து அல்லாட வைக்கும்படி எழுதியிருக்கிறான்? எந்த டாக்டரோ இப்படிப்பட்ட கயவர்களுக்கு யோசனைக் கூறியிருக்கிறான். அப்படிப் பட்டவர்கள் இருக்கையில் இவர்களுக்கு ஏன் புத்தி இப்படிப் போகாது? 'இவ்விஷயத்தைப்பற்றி ரகு தன் டைரியில் என்ன எழுதி யிருக்கிறான்' என்பதைப் படிக்க ஆவலும், ஆத்திரமும் சேர்ந்துத் தூண்டின.

.......பைத்தியமடிப்பதா....அது சரியானதல்ல........எல்லாம் மூளைக் குழம்பி கத்திக்கொண்டிருந்தால் என்ன ப்ரயோசனம். நேராக இருந்தால் கிழத்தை எப்படியாவது மடக்கிப் பிடுங்கலாம். பயித்தியம் பிடித்துவிட்டால், அது எப்படி பணம் கொடுக்கு . எல்லோருக்கும் ஒரே சமயத்தில் இந்த கோளாறு ஏற்பட்டால், சமாளிப்பது கஷ்டம், நம்மேல் சந்தேகம் கட்டாயம் ஏற்படும்: அதனல் நான் அப்படிச்செய்யப்போவதில்லை...

...உயிரோடு பைத்தியமாக அவதிபட விடக்கூடாது. பயமுறுத்திப் பெறுவது. இல்லையேல் சடார் சடார் என்று தீர்த்துக் கட்டிவிட்டால்?......முதலில் கிழத்தைத்தான் குறிவைக்கவேண்...

அதற்குமேல் லக்ஷ்மியால் படிக்க முடியவில்லை. டைரியைத் தூக்கி எறிந்தாள். அந்த இடத்திலேயே ஆயாசத்தால் படுத்துவிட்டாள். மோட்டு வளையை நோக்கிப் படுத்ததும், தான் முன்பு செய்த செயல்களெல்லாம் நினைவில் [illegible]க்கியது.

'ரஞ்சனைப்போல் ரகு இல்லை என்பதால் பொறுமைப்பட்டு ரஞ்சனை மட்டம் தட்டினேம். இவனுக்கு அளவிறந்து மீறிய இடத்தைக்கொடுத்து, இவ்வளவு தூரம் கொண்டு



183213

வந்துவிட்டு, இப்போது முட்டிக்கொண்டால்? 'மக்களுக்கு சத்ரு மாதாபிதா' என்ற வாக்கியம் எனக்கல்லவா பொருந்திவிட்டது? என்னுல்தானே எல்லோரும் இப்படி தான்தோன்றிகளாய் ஆனுர்கள். ஹூம்.... சென்றதை நினைத்து என்ன ப்ரயோசனம்?' என்று ஏங்கினுள்.

யோசித்து யோசித்து சலித்துப்போன அவள் மூளை யில் மீதம் தங்கிய முடிவு, 'சதாசிவம் மூலம் ரகுவின் இருப் பிடத்தை அறிந்து நாமே நேரேச் சென்று அவன் காலில் விழுந்து, கெஞ்சி... அவனை அழைத்து வந்துவிடுவது' என்ற உறுதிதான்.

---

## அத்தியாயம்—1.

### ரகுவின் வேகமும்—முத்துவின் த்யாகமும்

கடிதங்களும், குறிப்புகளும் படிக்க படிக்க வந்து கொண்டே யிருந்தன. அவளுக்கும் அலுத்து விட்டது. திரும்பித் திரும்பி, இதே விஷ யங்கள் வருவதைப் பார்த்தால் ஆத்திரம் மூண்டது. உட் காரவும் முடியவில்லை. இதையெல்லாம் போட்டுவிட்டு போனுல் யார் கண்ணிலாவது பட்டுவிடலாம். ஒருவர் கண் ணிற்கு எட்டுவதற்கு முன்பு சரோஜா கவனித்து விட்டால் போதும்.

நல்ல வேளை! பள்ளியில் ஏதோ நிதி திரட்டுகிறுர்கள் என்று வாஸூவையும் அழைத்துக் கொண்டு எங்கோ போயிருக்கிறுள். இவள் செய்யும் அட்டகாசத்தையும் அந்தப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடப்பதையும் பார்த் தால் வேடிக்கைதான். தான் இல்லாவிட்டால் தன் பள் ளிக்கு பணமே சேராது என்பது அவள் எண்ணம். ஒரு விதத்தில் அவள் எண்ணம் சரிதான். வாயாலேயே பேசிப் பேசி மயக்கி பணம் பறித்து விடுவாள். பள்ளியில், நிதி திரட்ட வேண்டுமோ! நாடகத்திற்கு டிக்கட் விற்க வேண் டுமோ! இவள் பெயர்தான் முதலில்... இவள் கொடுக்கும் தொகைதான் அதிகரித்ததாயிருக்கும்.

'ஹூம்....ஏதேதோ எண்ணியவாறு படுத்திருந்தால்...' என்று எழுந்தாள். ரகுவின் பெட்டியைக் கவிழ்த்து புத் தகங்கள் போன்று இருக்கவேண்டிய சாமான்களைத் தனித் தனியாகவும், கடிதங்கள், டைரிகள், குறிப்புகள் முத லியவைகளைத் தனியாகவும் பிரித்தெடுத்தாள். அறைக் கதவை லேசாக மூடிக்கொண்டு கீழிறங்கிப் போனுள்.

சரோஜாவும், வாஸுவும் தெனலிராமனைப்போல் சமயத்திற்கு வந்து சேர்ந்தார்கள்.

"அம்மா என் பெட்டிதான் நிறைந்தது. வாஸுவினுடையதில் பாதிதான்" என்றவாறு ஓடி வந்தாள் சரோஜா.

அதற்குள் வாஸு வெகுண்டு, "நிறைந்துவிட்டால் போய் வேறுபெட்டி வாங்கி, அதையும் நிரப்பி அனுப்பு. உனக்கு உங்கள் பள்ளியில் பரிசு வைத்துக்கொண்டு காத்திருக்கிறார்கள்....உ உம்" என்று ஏளனம் செய்தான்.

"முட்டாளே! நான் பரிசுக்காகவா வேலை செய்கிறேன். புண்ணியம் சம்பாதிக்க. உன்னைப்போல் நான் அல்பமில்லை."

"புண்ணியமா...சரி....உன் தலையெழுத்து அப்படி..."

"என்...னடா..."

"இல்லை சரோ! சதாசிவம் தாத்தா புண்ணியம் செய்கிறாரே....அவருக்கு என்ன நல்லது புதியதாக வருகிறது? எப்போதும் இருப்பதுபோல் இருக்கிறார். முத்து நன்மை செய்து என்ன புண்ணியம் சம்பாதித்தாலும், நல்லது ஒரு துளியாவது...ஹூ.... உம் ...பல்லு உடைந்தது....குழந்தை இறந்தது...இதுதான் புண்ணியத்தின் பலன். ரகு நம்மையெல்லாம் அடித்து பாவத்திற்குள்ளானலுங்கூட ஒரு கெடுதல்...அவனுக்கு...." என்னும்போது லக்ஷ்மியைக் கவனித்து வாயை மூடிக்கொண்டான்.

குழந்தைகள் பேசும் ஒவ்வொரு சொல்லும் அவளைக் குத்தியது. அதற்குள் சரோ "அம்மா! இதை உள்ளே பத்திரமாக வை. பணமிருக்கிறது" என்று கூறி கொடுத்தாள். சரோஜா சென்றதும் வாஸுவும் பெட்டியைக்



கொடுத்துவிட்டு "அம்மா! பக்கத்து வீட்டு மாமா, ஆபீஸ் வேலையை அவசரமாகச் செய்துக் கொண்டிருந்தார். அப்போது போய் உள்ளே நுழைந்து வேலைமைக் கெடுத்து, உண்டியைக் குலுக்கினாள் சரோ" என்று குற்றம் சாட்டினான்.

பாம்பு காதுடைய சரோஜா "ஓஹோ! சூரப்புலி நான் போனதும் அம்மாவிடம் சொல்கிறாயா? நான் போன பிறகு இவனும் பின்னாலேயே வந்து, பணம் வாங்கிக் கொண்டான். முன்னால் போக தைரியமில்லை என்று கூறாமல்..." என்று கூறி பல்லை நறநறவென்று கடித்தாள்.

லக்ஷ்மி எதற்கும் பதில் கூறவில்லை. வீட்டிற்கு வீடு வாசற்படி என்பதுபோல், குழந்தைகள் சண்டை போடாத வீடு எங்கு இருக்கிறது என்று விட்டுவிட்டாள்.

தன்னை யாராவது கவனிக்கிறார்களா? என்று தன்னைச் சுற்றிலும் விழியை உருட்டி நோக்கினாள். பிறகு மெதுவாக "முத்து! முத்து! இங்கே வா. தோட்டத்தில் குப்பையைப் போட்டு எரிப்போமே அந்த அடுப்பை பற்ற வை. பிறகு ரகுவின் அறைக்கு வா" என்றாள்.

'ஹோ' என்று எரிந்து கொண்டிருந்தத் தீயில் முத்துவும் லக்ஷ்மியும், ரகு தனது பொக்கிஷம் எனக் கருதி, பெட்டி பெட்டியாய் பூட்டி வைத்திருந்த குப்பைகளைப் போட்டார்கள். கிளறிக் கிளறி ஒரு துண்டும் அகப்படாதவாறு கொளுத்தி சாம்பலாகக் குவித்தனர்.

அப்போது லக்ஷ்மி தன் எண்ணத்தையெல்லாம் முத்துவிடம் நம்பி மனம் திறந்து கூறினாள்.

"முத்து! எல்லாவற்றிற்கும் உன் துணையே தான், உதவியேதான் நான் எதிர்பார்க்கிறேன். ரகுவை எங்கு தங்கியிருக்கிறான் என்பதை சதாசிவம் கண்டுபிடித்து விட்டாராம். அந்த விலாசத்தைச் தெரிந்து கொண்டால் பிறகு நாம் செய்யவேண்டியதைச் செய்யலாம். பாவம் அவரையும் அடிக்கடி இங்கு அழைக்கக் கூடாது. எத்தனை விஷயங்களைப் போனில் பேசுவது? அதுவும் முடியாது. ஆகையால் நீ நேரில் சென்று வா."

"அம்மா! என்ன வேண்டுமானாலும் செய்யறேங்க. முகஸ்துதி மட்டும் செய்யாதீங்க. காலாலே இட்ட வேலையை தலையால செய்யவேண்டிய வேலைக்காரங்களை அப்படிச் சொல்லாதீங்க. அம்மா! நான் மட்டும் சும்மா இருக்கிறேனா? ரகுவைப் பற்றி விசாரிச்சு அலைஞ்சிகிட்டுதாங்க இருக்

கேன். முன்பு சதாசிவம் ஐயா சொன்ன இடத்திலே இப்போ அவரு இல்லீங்க. நேத்து இந்த ஊர் கோடி பக்கம் போனேன். அப்போ, ரகு ஐயா, நாலைந்து பெண்களோடும், சில ஆண்களோடும் போய் ஒரு வீட்டிலே ஏறினரு நான் பார்த்தேன்.''

''என்ன...நீ பார்த்தாயா... பெண்களோடா........நான் நினைத்தபடிதான் நடந்துவிட்டது. முத்தூ! இனி திரிந்த பாலை எப்படியப்பா சரியாக்குவது. அந்த முடிவுதான் இவன் வாழ்க்கைக்கும்.''

''அதைரியப்படாதீங்கம்மா....அவங்களைப் பார்த்தால் சர்க்கஸ்காரனுங்கன்னு தோணுது....பயில்வான் மாதிரி.... கட்டு கட்டான உடம்பு...பார்த்தாலே நடுங்குது. அவுங்க போன வீடு புதிய மோஸ்தரில், தகதகவென்னு கூட இல்லீங்க. தோட்டம் இருக்குது சாதாரணமான வீடுதான் வாசல் கதவைத் தாண்டியதுமே, தோட்டத்திலேயே மேலே போவதற்கு படிக்கட்டு இருக்கிறது. ரகு ஐயா எல்லாரும் கூட அந்த படி வழியாகதான் மேலே போனுங்க. போனவுடன் முதல் அறைதான் இவருடையதாக இருக்கவேண்டும். அந்த அறை ஜன்னல் வழியாக வந்து எட்டிப் பார்த்தாரு. என்னை எங்காவது கண்டுகிட போறாரோன்னு தலையிலே முண்டாசு கட்டிகினு நவர்ந்து வந்துட்டேன்'' என்று கூறி முடித்தான்.

''முத்தூ! நீ சொல்வதிலிருந்து அவன் சர்க்கஸில் சேர்ந்து விடுவானே? எங்காவது இடக்காக விழுந்து கை காலை முறித்துக் கொள்வானோ.. இல்லை கூட்டு சேர்ந்து கம்பெனி துவக்க ஏற்பாடு செய்கிறானே தெரியவில்லையே.''

''இருக்கலாம். அதுக்காவதான் தன் பங்கு பணத்தைக் கூட கேட்டிருப்பாரு. யாரை நம்பறது...அவங்க, அவரை ஏமாத்திபுட்டா? ஒரு வேளை கடன் வாங்கி வேலையைத் தொவக்கிட்டு, பிறகு இங்கே வாங்கி அடைச்சிடலாம்னு எண்ணி பணமும் வைச்சிருக்காரோன்னுட்டு.''

''பணமும் வைத்திருப்பான். பணம் போட்டு, அந்த விவகாரத்துலே ஏதாவது சண்டை வந்து ஒருவனை ஒருவன் தீர்த்து விடப் போகிறார்கள். ரகுவின் கடிதங்கள், குறிப்புகள் மூலம் அவன் ஒரு முரட்டுத்தனமான அசட்டு தைரியம் அடைந்திருப்பதாகத் தெரிகிறது. அதன் பலனை இவனே ஏதாவது ஆத்திரப்பட்டு செய்து கொலை, கொள்ளை இதில் சேர்ந்து விடுவானே என்று எனக்கு உள்ளூர ஒரு பயம் முத்தூ!''

"பயம் வேண்டாங்க. அப்படியெல்லாம் நடக்காது. கடவுள் காப்பாரு. சண்முக ஐயா, பெரிய எசமான் இவங்க மனசும், தருமமும் வீணாகாதுங்க" என்றான்.

அக்குப்பை முழுவதும் எரிந்து கரியாகிய பின்பு லக்ஷ்மியின் உள்ளத்தை அழுத்திக் கொண்டிருந்த பாரத்தில் பாதியிறங்கியது போன்று இருந்தது.

குப்பைகளை ஒழித்தாகிவிட்டது. ரகுவையும் சந்திக்க வேண்டும் என்று தான் செய்த தீர்மானத்தை நிறைவேற்ற, நாலடி சென்ற முத்துவை திரும்ப அழைத்து, "முத்து! இதெல்லாம் பேசிவிட்டோம். இன்று இரவே நான் ரகுவைப் பார்க்கவேண்டும். ட்ரைவரை இருக்கச் சொல்கிறேன். நீ அழைத்து போ. நான் ஒரு கடிதம் எழுதி வைக்கிறேன். நான் காரிலேயே இருக்கும்போது, நீ மேலே போய், ரகுவிடம் அதைக்காட்டி, நான் அழைப்பதாகச் சொல், இல்லை சந்தர்ப்பம் சரியாயிருந்தால் என்னையே வந்து அழைத்துப் போ" என்றாள்.

'ஆவட்டுங்க....அந்த இடத்துலே ரகுவைக் கண்டதை சதாசிவம்ஐயா கிட்ட சொல்லிபுடணும். வரட்டுங்களா..." என்றுமுத்து நகர்ந்தான்.

"முத்து! நில். இதை அவரிடம் கூறவேண்டாம். நீ சொன்னையானல் உடனே புறப்பட்டு விடுவார். அவரை ரகு விஷயமாக எங்கும் அனுப்புவதில்லை என்று பார்வதி அம்மாளுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். கூறாதே" என்று சொன்னாள்.

பளுவை இறக்கிய சுமைதாங்கியைப் போல், லக்ஷ்மி சிறிது புதிய தெம்புடன் சென்று சுத்தமாகக் குளித்து மடியுடன், தெய்வத்தை ச்ரத்தையாக வழி பட்டாள். பிறகு நன்றாக உணவும் எடுத்துக் கொண்டாள்.

ரகுவின் கவலையாலேயே ஆகாரமே எடுத்துக் கொள்ளாது மெலிந்திருந்த அவளை அன்று சற்று பார்க்கலாம் போலிருந்தது. மனச்சாந்திக்கு ஏதோ ஒரு புத்தகத்தைப் புரட்டத் தொடங்கினாள்.

* * *

"எந்த கோட்டைக்கு யோசனை செய்யறீங்க. எத்தனை கொரல் கொடுத்தாலும் காதிலே விழலீங்களா?" என்று யோசனையில் மூழ்கியிருந்த முத்துவை வள்ளி கலைத்தாள். முத்துவின் மனதில் மட்டும் ஏதோ ஒரு நடுக்கமும், பயமும், எதிர்பார்ப்பும் சேர்ந்து அவனை செய்வதறியாது செய்து கொண்டிருந்தது. பதிலொன்றும் பேசாது அவள் முகத்தை மட்டும் பார்த்தான்.

"என்ன பதில் கூட சொல்லாமெ குந்தியிருக்கே?"

"வள்ளி! உன்னை ஒன்று கேட்பேன். நீ சரின்னு சொல்லுவியா?"

"என்ன மச்சான்! புதிர் போடுறே. சொல்லு!"

"ரகுவை அசப்பிலே ஒாண்ட கண்டேன். அங்கே அம்மாவை இன்னிக்கு இட்டுகினு போவணும்னு கேட்டாங்க...

"என்ன...ரகுவிண்ட இட்டிகினு...எனக்கு சரின்னு தோணலே மச்சான். நீங்க ஒத்துகிட்டீங்களா?"

"ஆமாம் வள்ளி. நான் தனியா போனல்தானே உனக்குக் கவலே. மனசு வரலே. நீயும் கூட வா. அம்மாவோ பயந்து நடுங்குறவங்க. காரிலே போகும்போது பயந்துக்காது பராக்கா பேசிக்கிட்டு வா. நான் எப்படியாவது ரகு ஐயாவை கூட்டி வந்துட்டா போதும். அப்புறம் வெளியே விடாதபடி பார்த்துக்கலாம்" என்றான்.

தானும் கூடச் செல்வதால் சற்று ஆறுதல் அடைந்து, "சரி" என்றாள்.

இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. இதற்கிடையில் ரேவதியின் சிநேகிதிகள் வந்தனர். ரேவதி புறப்படத் தயாரானாள். லக்ஷ்மி அவளை லேசில் விடுவாளா? "ஏன் ரேவதீ! உனக்குச் சொல்வதை சுவற்றில் முட்டிக் கொள்ளலாம். என் அனுமதியின்றி நீ எங்கும் போகக் கூடாது. இன்று உனக்கு வீட்டில் செய்ய சில காரியங்கள் இருக்கின்றன" என்று கூறி தடுத்துவிட்டாள்.

ரேவதி பிடிவாதம் பலிக்காமல் பறந்துவிட்டது, சித்தியின் வார்த்தைகள் இந்த காதில் வாங்கி அந்த காதில் விடுவதுதானே என்று அலக்ஷியமாயிருந்தவளுக்கு இது வாட்டத்தையேக் கொடுத்தது. 'என்ன வேலையோ எனக்கு சித்தி கூறியபடி!' என்று யோசித்தாள்.

லக்ஷ்மி புறப்படும் சமயம் "ரேவதி நான் சற்று வெளியே போகிறேன். குழந்தைகள் தூங்கி விட்டார்கள், அவர்களையும் வீட்டையும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். பின்னலெல்லாம் பூட்டிவிட்டேன். இந்தக் கதவையும் தாழ்ப்பாளிட்டுக் கொள். சீக்கிரம் வந்து விடுகிறேன்" என்று கூறிச் சென்றாள்.

'ஒஹோ இதுதான் வேலையோ?' என்று ரேவதி புரிந்து கொண்டாள். 'எங்கே போகிறாய்?' என்று அவள் மனம் கேட்க நினைத்தாலும் நா ஏனோ தடுத்து விட்டது. சித்தி எதிரில் ஆத்திரத்தோடு அவமரியாதையாக பேசவும்

டம்பப் பையுடன் நாகரிகமாகத் திரியவும் ரேவதி ஆசைப் படுவாளே அன்றி மற்றதற்கு தைரியம் போதாது. கேவல மான வழிகளிலும் செல்லமாட்டாள். சித்தி சென்ற வுடனே, கதவைத் தாழ்பாளிட்டு விளக்கை அணைத்து விட்டு முன்புற ஹாலிலிருந்த சோபாவிலேயே படுத்துக் கொண்டாள். 'சித்தி எங்கு போயிருப்பாள்? எங்குமே போகமாட்டாளே! எங்கும் போய் பழக்கமில்லாததால் வெளிச்சத்தில் போகக் கூசிதான், இரவில் போகிறாள் போலிருக்கிறது' என்று சிந்தித்து, அதே களைப்பில் உறங் கியும் போனாள்.

* * *

இவர்கள் ஊர் சந்தடி சற்று ஓய்ந்த பிறகு புறப்பட்ட தால் நேரமாகி விட்டது. போய் திரும்புவதற்கு நடுநிசி யாகிவிடப் போகிறதே என்று வேகமாக ஓட்டினான் காரை.

லக்ஷ்மிக்கு திக்திக்கென்று அடித்துக் கொள்கிறது வள்ளிக்கு அதற்குமேல். இரவின் ஆட்சி வேறு அவர்கள் பயத்தை நிசப்தத்தால் அதிகமாக்கியது. முத்துவின் அடையாளப்படி காட்டிய வீட்டிற்குச் சற்று தள்ளினால் போல் கார் நின்றது.

கடிதத்தை நடுங்கும் கரங்களுடன் முத்துவின் உத றும் கைகளில் வைத்தாள் லக்ஷ்மி. வள்ளியின் நெஞ்சம் பதறியது. முத்து அடிமேல் அடி வைத்து நடந்தான். அவ்வீட்டிலும் அதன் சுற்று வட்டாரம் முழுவதும், மக்கள் உறங்கிப் போயிருந்தனர் என்பதற்கு அறிகுறியாக விளக்குகள் அணைந்திருந்தன.

முத்து மாடிப்படி யேறத் துவங்கிவிட்டான். பூனையின் பாதம் பட்டால்தான் சப்தம் உண்டாகாது என்பர். முத்து அதன்படி தன் காலை எப்படி வைத்து நடந்தானோ, ஒரு துளி சப்தம்!......இல்லவே இல்லை. இருட்டில் ஒரு கரிய உருவம் நகர்வதுதான் தெரிந்தது.

என்ன ஆச்சரியம்! உள்ளே போகக்கூடிய வழிக் கதவு திறந்தே இருந்தது. முத்து முன்பு பார்த்தபடி முதல் அறை அருகில் சென்றான். அந்த கதவும் மூடப்படவில்லை. சற்றே துவாரம் வழியாக உள் முழுவதும் நன்றாகத் தெரிந் தது. தெருவிளக்கும் உதவி புரிந்தது.

ஆ! அவன் கண்ட காட்சி! 'ஐயோ'... என்று வாய் விட்டு அலறியிருப்பான். மயிரிழை......க்ஷணம்தான்........ என்ன செய்வது? கதவை சப்தமின்றி ஒரு ஆள் நுழையும் அளவு திறந்தான். உள்ளே புகுந்தான்.

திடுக்கிட்டான். ரகுவின் ஒரு கை முழுவதும் கற்றை கற்றையாகப் பணம்...மற்றொரு கையில்...கத்தி...பிச்சுவா கத்தி....ஒரே அறையில் படுத்திருக்கும் நண்பனின் பணத்தைக் களவாடியதோடல்லாமல், அவனைக் கொன்று பரலோகம் அனுப்பக் கத்தி! அவனது மார்பிற்குச் சமீபித்து விட்டது.

முத்துவின் மூளையின் வேகத்தில் "எசமான்" என்றான் கரகரத்த குரலில். எதிர்பாராத இந்தக் குரலினால், ஏற்கெனவே இருந்த குலைப்பும், படபடப்பும் சேர்ந்து குறியைத் தப்ப வைத்து விட்டது.

மார்பில் பாயவிருந்த அக்கத்தி....மார்போடு அணைந்திருந்த கையில் பாய்ந்து விட்டது. அவன் கையிலிருந்து பீறிட்ட ரத்தம் குபீரென்று ரகுவின் ஆடை முழுவதும் பாய்ந்தது.

முத்துவிற்கு எங்கிருந்து வந்ததோ அந்த அசுரபலம்' ஒரு கையில் ரகுவிட மிருந்து கத்தியையும், நோட்டுக்கட்டுகளையும் பறித்துக் கொண்டான். மற்றொரு கையில் ரகுவைத் தரதரவென்று இழுத்து வந்தான். காரிலே லக்ஷ்மியின் பக்கத்தில் தள்ளினான்.

முத்துவின் கையில் கத்தி யிருப்பதை கவனித்த லக்ஷ்மி, "என்ன முத்து" என்று கத்திவிட்டாள்.

"உஸ்....பேசாதிங்க. ரகு....குத்திட்டாரு....நான் வாங்கிக் கிட்டேன்....கத்தியை....என்னைப் பற்றி கவலை வேண்டாம். ரகுவை காப்பாத்திட்டேன்........ஒப்பிச்சிட்டேன். நான்தான் செய்தேனுன்னு சொல்லுவேன். நீங்க யாரும் உண்மையை வெளியிடக் கூடாது. வள்ளி! என் மேலே ஆணை. கடவுள் மேலே சத்தியம் விசயத்தை வெளியிட்டே அன்னிக்கே நான் தற்கொலை புரிஞ்சி சாவேன். ஜாக்கிரதை. ட்ரைவரு உனக்கும்தான். உம் சீக்கிரம் கிளம்புங்க....நான் போறேன்...." என்றவன் மின்னல் வேகத்தில் மறைந்தான். காரும் பறந்தது.

அதற்குள் ரகு "முத்து...அவன்...அவன்.. மருந்து.... மயக்கம்...மயக்கம்...." என்று ஏதோ உளறியது முத்துவின் செவிக்கு அறைகுறையா எட்டியது.

துறுதுறுப்பான மூளையுடைய முத்து....அந்த துண்டு துண்டான உதிர்ந்த சொற்கள் மூலம் அறிந்து கொண்டான். அது சரி என்பதுபோல் குத்துப்பட்டவன் கத்தவேயில்லை. ரகு அவனுக்கு மயக்கத்தையும் உண்டு பண்ணி

விட்டு பிறகு குத்தியிருக்கிறான். அதுதான் ரகு தெரிவித்தது. தான்தான் குத்தியது என்பதை நம்ப வேண்டுமாதலால் தன் ஆடைமீது ரத்தத்தை தெளித்துக் கொண்டு அந்த அறை விளக்கைப் போட்டான். சில சாமான்களை உருட்டி ஓசை செய்து எல்லோரையும் எழுப்ப வழி தேடினன் முத்து.

விளக்கு எறிவதையும், ஓசையையும் கவனித்து பக்கத்து அறைகளில் இருந்த ஆண் பெண்கள் எல்லோரும் விழுந்து அடித்துக்கொண்டு ஓடிவந்தனர். முத்து தப்ப முயற்சிப்பது போல் ஓடத் துவங்கினான். "அதோ....பிடியுங்கள்...திருடன்...கொலை...கொள்ளை'' என்று கூக்குரலிட்டவாறு அனைவரும் ஓடிவந்து அவனை மடக்கிக் கட்டிப் போட்டனர். குத்தான குத்தும், அடியுமாக பிளந்து தள்ளினர்கள். உடனே போலீஸுக்கு போன் மூலம் செய்தி ஓடியது. மயக்கம் தெளிவிக்க ஜலத்திற்கும், விசிறிக்கும் மூலைக்கொருவராய் ஓடினர். குத்து பட்டவன் கையிலிருந்து ப்ரவாகமாய் வழிந்தோடும் ரத்தத்தைக் கண்டு அஞ்சினர். துணிகளால் மூடிக் கட்டினர். முத்துவிற்குக் காவலாக இருபக்கமும் இருவர் நின்றிருந்தனர். முத்துவும் முகத்தை முரடன் போல் கடுமையாக வைத்துக் கொண்டான்.

அவர்களில் ஒருவன், "மிஸ்டர் ரகு எங்கே?'' என்றான். இதைக் கேட்டதும் முத்துவின் வயிற்றில் நெருப்பைக் கொட்டியதுபோல் இருந்தது. அவன் தவிப்பை அடக்கும்படி ஒரு பெண்மணி "காலையிலேயே, 'நான் இரவு ஒரு இடத்திற்குப் போகவேண்டி யிருக்கிறது போய் விடுவேன். என்னைத் தேடவேண்டாம்' என்று எல்லோரிமும் கூறி விடை பெற்றுக் கொண்டாரே'' என்றாள்.


"உம்....அவர் இந்த அறையிலிருந்தாலாவது இப்படி நடந்திருக்காது. இந்தப் பாவியை மெரித்துத் தள்ளியிருப்பார். நம் அதிர்ஷ்டம்தான் அவரும் போய்விட்டார்" என்று அங்கலாய்த்தாள் மற்றொருத்தி.

"உளவு தெரிந்த களவாணிப்பயல் கொலைகாரனே! அவன் உயிர் போனல்....மரண தண்டனை....ஹூம்'' என்று கூறி ஓங்கி ஒரு குத்து விட்டான். முத்து வாயைத்திறந்து 'அம்மா' 'அப்பா' என்று கத்தினை? ஹூ ஹூம் "உம்" என்ற முனகல் கூட எழுப்பாது நின்றிருந்தான். அவன் கண்கள் மட்டும் நீரைப் பொழிந்த வண்ணமே இருந்தன.

"செய்வதைச் செய்துவிட்டு அழுவதைப் பார்... கோழை. 'நீலிக்கு நெற்றியில் கண்' என்பார்கள். அது

போல்தான் இருக்கிறது.'' என்று ஒவ்வொருவர் ஒவ்வொருவிதம் கூறி அவன் தோலை உரித்துக்கொண்டிருந்தனர்.

அவன் கண்ணீர் சிந்தும் காரணம் இந்த சொகுசு வாலிபர்களுக்கும் நாரீமணிகளுக்கும் என்ன தெரியும்? தான் இச்சமயத்தில் காப்பாற்றி விட்டாலும்கூட ஷண்முகத்தின் குடும்பம் இவ்வளவு கேவலமான நிலைமைக்கு வந்து விட்டதே. இனி நாம் கூட வீட்டில் இல்லாது அம்மா என்ன கஷ்டபாடுவார்களோ? ரகு இதோடுதிருந்தி விடுவானு? என்ற ஏக்கமும், 'இவ்விஷயமெல்லாம் கட்டாயம் பத்திரிகைகளில் வெளிவரும். அது ரஞ்சனுக்கு எட்டி விடுமோ? நம்மால் ஒருவிதத்தில் நன்மை செய்கிறோம் என்று நினைக்க மற்றொரு விதத்தில் தீமையாகி விடப் போகிறதே' என்ற கவலையும் சேர்ந்துதான் அவனைக் கதறச் செய்தன.



'அம்மா, இன்றைக்கு அழைத்து போ என்றபோதுநான், இன்றைக்கா?....என்று மனதில்நினைத்தேன். நல்லவேளை! வாயினுலும் சொல்லியிருந்தால்?....இன்று வருவது நின்று போயிருக்கும். அப்படி நாம் வராதிருந்தால்....ரகுவின் கதி?...என்ன ....என்னவாகியிருக்கும்?....ஐயோ.... என்ன மயக்கமருந்து கொடுத்திருந்தாலும்...காலையில் விஷயம்அறிந்து ரகு மீதுதானே சந்தேகப்படுவார்கள்....மயக்கமில்லாதிருந்தால் அந்த ஆள் கத்திபட்டதும் கூச்சலிட்டு எல்லோரும் வந்துவிடமாட்டார்களா?... அதற்குள்நான் எப்படி ரகுவைக் கொண்டு காரில் தள்ளி, விஷயத்தைக் கூறிவிட்டு வரமுடியும்? ஆபத்திலும் ஒருஅதிர்ஷ்டம்என்பதுபோல் ரகு ஐயா யோசனையோடுதான் செய்திருக்கிறார்' என்று ஒரு விதத்தில் த்ருப்திபட்டான்.ஆனுலும்வள்ளியை நினைக்கும்போது வேதனையே மீச்சியது.

இவன் இப்படி சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும்போது போலிஸார் வந்துவிட்டனர்.

நடந்ததை அறிந்தும் முத்துவை விசாரணைச் செய்யத் தொடங்கினர்.

"ஏனப்பா! இவர்கள் கூறுவதெல்லாம் சரிதானே?" என்று கடுங்குரல் ஒன்று கர்ஜித்தது. அதன் ஓசை அவ் வட்டாரம் முழுவதையும் எதிரொலிக்கச் செய்தது.

சிறிது தயங்குவதுபோல் பாவனை செய்துவிட்டு "ஆமாங்க...." என்றான் முத்து.

"ஹூம்....உளவு தெரிந்த பேர்வழியோ...? எதற்காக அவரைக் குத்தினாய்!....இதற்கு முன் அவருக்கும் உனக்கும் என்ன பகை?"

"இல்லீங்க....பகை உள்ள பேர்வழிகளாய் தெரிந்தது...பணத்தாசையால்தான்..." என்று மென்று விழுங்கினான். பிறகு "இந்த அறையிலிருந்த வேறொருவரும் வெளியே போயிட்டாரு....பிறகு...வந்தேன்..." என்று தன்னைக் கேட்காத கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறி விட்டான்.

"ஓஹோ...வெளியே வந்தவரையும் கொல்லாது விட்டாயே...சரியான சவுக்கடி கொடுங்கடா. உன் பெயரென்ன? உன் தொழில் இதுதானா?..."

'என் பெயர்?...முத்து என்று உண்மைப் பெயரைக் கூறலாமா? வேண்டாம்'.

"என் பெயர் மாரிமுத்துங்க" என் தொழில் என்ன?... கூலி வேலை ஏதோ ஒண்ணு செய்வேனுங்க" என்றான்.

"ஸார்! அவருக்குத் தெளிவு வருகிறது." என்று கூறவே அங்கு போனார் இன்ஸ்பெக்டர். அவனால் வாக்கு மூலம் ஒன்றும் கூற முடியவில்லை. தூங்கிக் கொண்டிருந்தவனை மயக்கமடையச் செய்ததால் அவனுக்கு என்ன தெரிந்திருக்க இயலும்? முத்துவே ஒத்துக் கொண்டு விட்டதால், வேறு கலவரங்களின்றி விலங்கை மாட்டி அவனை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர். குனிந்த தலையுடன் உடல் குன்னிக் குறுக முத்து தளர் நடை நடந்தான்.

காரில் ஏறிய ரகுவிற்கு தன் நிலையே புரியவில்லை. கள் குடித்த வெறியனின் சாயல் அப்படியே அவன் முகத்தில் பிரதி பலித்தது. தலை மயிர் கட்டுக்கடங்காத காடு போல் விரிந்தாடிக் கொண்டிருந்தது. உட்டெல்லாம்—ஆடை முழுவதும் ரத்தம்! கண்களில் பயத்தின் மருட்சி.

தன் பக்கத்தில் அமர்ந்திருக்கும் தாயைப் பார்த்தான் "அம்மா!...முத்து...ஐயோ முத்து..." என்று குழறினான். சிறிது நேரம் கழித்து மறுபடியும் "ஆ...கத்தி...பணம்...

ரத்தம்...ரத்தம்...'' தன் ஆடைகளைப் பார்த்துக் கொண்டு பெரிதாகக் கத்தத் தொடங்கினான்.

லக்ஷ்மிக்கு இருந்த கலவரத்தில்-பயத்தில்-இவன் குரல் யானையின் பிளிறலைப் போல் அவள் செவிகளில் பட்டு நிஸ்த்ராணியாகி விட்டாள். எப்படியோ ரகுவின் வாயைப் பொத்தி "ஐயோ! ரகு பேசாதே. ஆபத்து. மூடிக் கொள் வாயை...ம்... இதோ வீடு வந்து விட்டது, பொறு'' என்று கூறி கதறி விட்டாள். ரகு மிரள மிரள விழித்துகொண்டே யிருந்தான். லக்ஷ்மியின் உள்ளம் எங்கெங்கோதாவித் தாவி மீண்டு கொண்டிருந்தது.



காரிலிருந்து முதலில் வள்ளிதான் இறங்கினாள். லக்ஷ்மியும் வள்ளியுமாய் பேசாது ரகுவைப் பிடித்தவாறு சென்றனர். லக்ஷ்மி சுற்று வட்டாரங்களைக் கவனித்தாள். இருள் கவிந்திருந்தது. சந்தடியின்றி கதவருகில் சென்று "ரேவதி! ரேவதி....கதவைத் திற'' என்று நடுங்கும் குரலுடன் அழைத்தாள்.

ரேவதி அயர்ந்த நித்திரையில் இருந்ததால் கனவில் அழைப்பது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது. திடுக்கிட்டு கண்விழித்தவள், விளக்கை ஏற்றினாள். ஜன்னல் மூலம் பார்த்ததில் முதலில் ரகுவின் உருவமே தெரிந்தது. ரகுவைக் கண்ட ரேவதி, சதாசிவத்தைக் கொல்ல யத்தனித்த ரகு, தன்னையும் குத்த வந்துவிட்டான் என்று எண்ணி பயந்து "ஐயோ!ரர்...ரர்ர... கூ... சித்...சி.. சித்தீ...'' என்று குழறி நடுங்கி பீதியால் சோபாவின் பின்புறம் போய் ஒளிந்துகொண்டாள்.

இவள் அலறலைக்கேட்ட லக்ஷ்மியின் உடல் சில்லிட்டது. விஷயம் வெளி பரவாமல் இருக்க ரகுவை எப்படியோ அடக்கி அழைத்துவந்தோம். இந்த ரேவதியின் குரல் அக்கம் பக்கத்தவர்களை எழுப்பிவிடும் போலிருக்கிறதே என்ற கவலையும் சேர்ந்தது. ஜன்னலருகிலிருந்த ரகுவை நகர்த்திவிட்டு "ஸ்...ரேவதி... இதோ பார்...நான் தான்...சித்தி, கதவைத்திற'' என்றாள். அவள் குரல் கவலையால் பிசின்போல் ஒட்டிக்கொண்டு தடுத்தது. ரேவதி கதவைத்திறந்தாள். ஆனால் மறுகணம்?...

"ஐயோ!...சித்தீ...இது என்ன ரகுவின் ஆடை...உடலெல்லாம்? ரத்தம்...ரத்தம்" என்று கத்தத் தொடங்கினாள்.

வள்ளியும் லக்ஷ்மியும் ரகுவை உட்காரவைத்தனர். முன் பக்கமுள்ள விளக்கை எல்லாம் நிறுத்திவிட்டு, ட்ரைவரை உட்புறம் அழைத்துவந்தாள் லக்ஷ்மி.

''ட்ரைவர்! என்னால் பேசக்கூட முடியவில்லை. நான் செய்த பாவம் இப்படியெல்லாம் நேருகிறது. முத்து எத்தனை நாளாக வேலையிலிருக்கிறானோ அத்தனை நாளாக நீயும் இருக்கிறாய். முத்துவின் தியாகத்தைப் பார்த்தாயா? அதை நினைக்கும் போதே எனக்குக் கண்ணீர்தான் வருகிறது. நீயும் இந்த வீட்டு மனிதர்களில் ஒருவனாய் இருந்துவிட்டாய். இனியும் அப்படியே யிருந்து, இந்த ரகசியத்தை வெளியிடாதே. எனக்கு நீ 'வெளியிடுவதில்லை' என்று சத்தியம் கொடு ட்ரைவர். உன்னை வேண்டிக்கொள்கிறேன்'' என்றாள்.

''அம்மா! ஐயா மேலே ஆணைங்க. என் உயிருள்ளளவும் வெளியிடமாட்டேன். கவலைப்படாதீங்க. மேலே ஆகவேண்டியதைச் செய்யுங்க'' என்றான்.

ஒரு பெரிய மனிதரை பார்க்க வேண்டுமானாலும், முக்கியமான காரியம் நடக்க வேண்டுமானாலும், முதலாளியை கவனிப்பதைவிட சுற்றுபுற தெய்வங்களைதான் முதலில் கவனிக்க வேண்டியிருக்கிறது. ஆஸ்பத்திரி செல்வதற்குக்கூட முகப்பு வாயிலிலிருக்கும், வாயிற் காப்பானிடம் போகும் போதெல்லாம் இரண்டணா போட்டால்தானே உள்ளேச்செல்லமுடிகிறது? ஒரு வீட்டில் ஒரு முக்கியமான விஷயத்தையோ, ரகசியத்தையோ வெளியிடாமல் காப்பாற்றுவதாக நினைத்திருப்பார்கள். ஆனால் அவர்கள் வீட்டு ஊழியர்களான, சமையல்காரன் வேலைக்காரன் முதலியவர்களின் குசகுசப்பால் அது அம்பல ரகசியமாகிவிடும்.

அதனால்தான் முதலில் ட்ரைவரிடம் சென்று வெளிப்பரவ விடாது தடுத்தாள் லக்ஷ்மி. ட்ரைவரும் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்தான் என்றாலும் கூறவேண்டியது முறையல்லவா?

லக்ஷ்மி ஒன்றும் தோன்றாது நின்றாலும், வள்ளி தறதறவென்று ரகுவையும் லக்ஷ்மியையும் அழைத்துக்கொண்டு, பின்புறமுள்ள குளியலறைக்குச் சென்றாள். ரேவதிக்கு ஒன்றும் புரியவில்லை. முத்துவையும், காணாது ரகுவை இந்த அலங்கோலத்துடன் காணும்போது அவளுக்கு விஷயம்புரியாது குழம்பி மயக்கம் வரும்போலிருந்தது.

ரகுவின் ஆடைகளை யெல்லாம் பறபறவென்று லக்ஷ்மி களைத்தாள். பிறகு வள்ளியும், லக்ஷ்மியும் மாறிமாறி பச்சைத்தண்ணீரை வாரிவாரி தலையில் கொட்டினர். குளுமையான நீரில் நீராடினால், தெம்பு ஏற்படுவதோடு, ப்ரமை நீங்கும் என்று கொட்டித் தீர்த்தனர். லக்ஷ்மி ரகுவின் ரத்த கறை படிந்த ஆடைகளில் கிணற்றடியில் இருந்த கற்களைப் போட்டுக் கட்டி, கிணற்றில் போட்டுவிட்டாள். 'கடவுள் சூசிகையாகத்தான் புத்தி கொடுத்து ரகுவின் குப்பைகளைக் கொளுத்தச் செய்தாரோ!' என்று தோன்றியது அவளுக்கு.

ரேவதிக்கு ஒன்றும் புரியாவிட்டாலும் சமயத்திற்குத் தகுந்தாற்போல், ரகு குளிப்பதைக் கவனித்து, அவன் அணிய நல்ல ஆடைகளை எடுத்து வந்து தயாராக நின்றாள். லக்ஷ்மிக்கு இது த்ருப்தியை அளித்தது.

''வள்ளீ! நான் உனக்கு ஒன்றும் கூறவேண்டியதேயில்லை. முத்து கூறியதே போதும் என்றால் உங்களுக்கு நன்மை ஏற்படாவிட்டாலும் கஷ்டம் ஏற்படாது இருக்கலாம். ஆனால் விதி எப்படி எப்படியோ சதி செய்கிறது. வள்ளி! எங்கள் குடும்ப கௌரவமே உன் கையில் தான் இருக்கிறது. எங்களை க்ஷமித்துவிடு வள்ளீ'' எனக் கண்ணீர் பெருகக் கேட்டாள். ரகுவின் பக்கம் திரும்பி டேய் ரகு! அவள் காலில் விழுந்து மன்னிப்பு கேளடா! உன் உயிரையும், நம் குடும்பகௌரவத்தையும் ப்ரதானமாகக் கருதி தன் மனைவி மக்களையும் த்ருணமாக மதித்து ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டானே தியாகி... முத்து. அவள் மனைவியின் காலில் விழு. அவர்களுக்கு நீ இழைத்தத் துன்பங்கள் ஒன்றா? இரண்டா? அந்த அசுர எண்ணங்களையுடைய நெஞ்சிற்கு சமாதி கட்டடா. இந்தத் தியாக தம்பதிகளை உன் மனதில் கோவில் கட்டிப் பூஜி. புனர்ஜென்மம் எடு'' என்று துக்கம் நெஞ்சடைக்க, கண்ணீர் பொங்கக் கூறி, ரகுவை வள்ளியின் காலடியில் இழுத்துத்தள்ளினாள்.

சித்தப்ரமை பிடித்தவன் போலிருந்த ரகுவும், "வள்ளீ! என்னை மன்னிப்பாயா?'' என்று இறைஞ்சி வேண்டினான். வள்ளியால் இதையெல்லாம் சகிக்கவே முடியவில்லை. வந்த சிறு கஷ்டங்களை சமாளித்தாள். தன் கணவனே தன்னை இப்படி தனியளாக்கிவிட்டு ஆபத்தில் சிக்கியதையும் அவன் சிறைவாசத்தில் படப்போகும் 'சித்திரவதைகளையும் நினைத்தபோது அவள் குடல் கலங்கியது. இன்னும் கஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு ஏன் உயிரோடு இருக்க

வேண்டும்? தன் எஃகு இதயம் உடைந்து விடக்கூடாதா? என்று எண்ணி துயரப் பெருமூச்சு விட்டாள்.

"அம்மா இப்படியெல்லாம் பேசாதீங்க எழுந்திருங்க" என்ற வள்ளி முகம் பொதித்து விம்மினாள். இவ்வளவு நிகழ்ச்சியும் குளியலறையிலேயே நிமிடக்கணக்கில் நடந்தேறியது.

பிறகு கீழே இருந்த ஒரு அறையிலேயே ரகுவைப் படுக்க வைத்தாள். சதாசிவத்திற்கு, 'ஒரு முக்கியமான விஷயம் சீக்கிரம் வரவேண்டியது' என போன் செய்தாள்.

ரேவதி எப்படியோ தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, சித்தியிடம் கேட்டு நடந்த விஷயத்தை அறிந்து கொண்டாள். தான்தான் ஏதோ தவறு செய்துவிட்டது போல் அவள் மனதில் ஒரு எண்ணம்—பீதி. லக்ஷ்மி ரேவதி இருவரும் ரகுவின் அருகில் அமர்ந்திருந்தனர். ரகு சற்று நேரம் கண்ணை மூடிக் கொள்கிறான். திறக்கும்போது "அம்மா...பயம்...கத்தி குத்து...போலீஸ் வருகிறதா?" என்று சொல்லி மிரள விழித்துக்கொண்டே ரேவதி பக்கம் திரும்பி "யார் நீ...ரேவதி...ரேவதிதானே...பொய் சொல்லாமல் சொல்...என்னை, ஏமாற்றாதே...ரேவதி....எனக்கு தானே அந்த பணம் முழுவதும்?...அவன் இறந்துவிட்டானா? ...கம்பனி துவக்கி உன்னையும் பெரிய" என்று கூறி நிறுத்தினான்.

லக்ஷ்மியின் உபதேசப்படி ரேவதி, "சரி ரகு...என்னை பெரிய...ஆமாம்..." என்று விஷயத்தைப் புரியாமலேயே புரிந்த மாதிரி தலையை ஆட்டினாள். அவன் எதைக்கேட்டாலும் "சரி', ஆமாம்' 'அப்படியே செய்யலாம்'—இது போன்ற பதில்களைக்கூறி இருவரும் த்ருப்தி செய்து வந்தனர்.

ரகுவின் நிலையை இன்னது என்று விவரிக்க முடியவில்லை. ஒருசமயம் சித்தப்ரமை அடைந்தவன்போல் உளறுகிறான். சில சமயம் நல்ல அறிவோடு பேசுகிறான். வள்ளியிடம் லக்ஷ்மி மன்னிப்புக் கோரச்சொன்னபோது, "சரியாகப் புரிந்து தானே பேசினான்? உள்ளுக்குள்ளேயே ஏதோ ஒரு கிலி அவனை ஆட்டி அப்படி செய்துகொண்டிருந்தது.

இரவில் இந்த நேரத்தில் யாருக்கு அழைப்பு வந்தாலும் ஒருவித திகில் ஏற்படுவது இயற்கைதானே! சதாசிவமும் அதற்கு இலக்காகி நடுக்கத்துடன் ஓடிவந்தார்.

என்ற பதமும், இன்னும் சில உருப்படிகளும் அவருடைய தனி மெருகான உருப்படிகளாகும்.

அன்று பல்லவி, ராகமாலிகை முடிந்ததும் சபையிலிருந்த சிலர் 'சகாஞ தோமு சேயக, தோமு சேயக' என்று கத்தினர்கள். இன்னும் சிலர் திருவாரூர் ராஜாயி பாடும் சுவதீக்ஷக்ஷாபரு, ஸ்ரீவேணுகோபால என்று பெரிதாக கத்தினர்கள். இதற்குள் ஸ்ரீதாயி அவர்கள் சகாஞராகம் பாட ஆரம்பித்து விட்டார்கள். ஏற்கனவே அந்த அம்மாளுக்கு சன்ன சாரீரம், இரண்டாம் தரம் கத்தியவர்கள் விடாமல் சிவதீக்ஷக்ஷாபரு ஸ்ரீவேணு கோபல என்று கர்ஜிப்பதுபோல் கத்தினர்கள். பாவம்...அந்த அம்மாளுடைய முகம் ஏதோமாதரியாய் விட்டது. பாடுவதை சடக்கென்று நிறுத்திவிட்டார்கள். ஒருவரும் எதிர் பாரா வண்ணம் ப்ரமிக்கும் முறையில் அந்த அம்மாள் எழுந்து நின்று இருகைகளையும் கூப்பி "மகனீயர்களே மன்னிக்க வேண்டும். நான் திருவாரூர் ராஜாயி அல்ல, நான் பெங்களூர் தாயி என்பதை ஞாபகப் படுத்துகிறேன். பாடுகிறவர்களுக்கு உத்ஸாகம் கேட்பவர்களால் உண்டாகிறது. நீங்கள் இப்படி ஒரு கலாட்டா செய்தால் கொஞ்சம் நெஞ்சம் இருக்கும் உஸ்சாகமும் குறைந்து விடுகிறது. ஏதோ எனக்கு தெரிந்தவரை பாடுகிறேன். அமைதியாய் இருங்கள்" என்று கூறி உட்கார்ந்தார்கள்.

சபையில் எழுந்த கரகோஷத்தின் எதிரொலி அடங்க சில நிமிஷங்கள் ஆயிற்று. உடனே சாகஞராகமும் தோமு சேயக என்ற பதமும் சபையோரை வசீகரித்தது.

183213

Jaganmohini (Sep. 1957) Regd. No. 2210

பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
அருணை
கர்ப்பாசயரோக நிவாரணி
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.
AYURVEDASRAMAM (PRIVATE) LTD.
MADRAS-17.

## வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)

ரூ. 4.
[illegible]த்தியின் சிகரம்

ரூ. 3.
நிர்மலநீரோடை

ரூ. 2-8
மலர்ந்த இதழ்
வானக்குயில்
மதுரகீதம்

ரூ. 2-4
ஞானதீபம்

ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி
தெய்வீக ஒளி
பாதாஞ்சலி
புனிதபவனம்
துணைக் குன்று
ஜீவநாடி

ரூ. 1-12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை

ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
[illegible]கிழ்ச்சி உதயம்

ரூ. 1-4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
வீரவஸந்தா

ரூ. 1-2
அபராதி

ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா.12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
தென்னாட்டு கல்யாண முறைகள்

அணா 8.
உளுத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

## வை. மு. ஸ்ரீ.

உதய சூரியன் 1-4
பெண்மணிக்கனவு 1-0
இருளில் ஒளி 1-4
தியாகபலி 0-12
ஜயந்திசிந்தனைகள் 1-8
கோதாஹ்ருதயம் 0-12

## வை.மு. பத்மினி

ரூ. 1 8
ஸ்ரீ க்ருஷ்ணார்ப்பணம்
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1-0

சுத்தானந்த பாரதி
காந்தி கீர்த்தனம் 3-8

ப்ர.ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி
ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமஉரை 1-0
அபூர்வ ராமாயணம் [illegible]

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St. Triplicane, Madras 5.